6 - 1986
...CALS
DIVISION

விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 ஆனி 1 றம்ழான் 6 இதழ் 124
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (15—6—86)

இலங்கையின் விளக்கம்

## பரிசீலனை செய்யப்பட்டபின்பே இந்திய நிலை தீர்மானிக்கப்படும்

அமைச்சர் சிதம்பரம்

''வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு இலங்கை அரசு அளிக்க உத்தேசித்திருக்கும் அதிகாரப் பகிர்ந்தளிப்பு குறித்து விரிவான விளக்கம் கிடைக்கும் பட்சத்திலேயே இந்தியா, இலங்கை இனப்பிரச்னை விடயத்தில் தொடர்ந்து மத்தியஸ்தம் வகிப்பது குறித்து தீர்மானிக்கும்''.

இவ்வாறு இந்திய மத்திய ஊழியர் நல இணை அமைச்சர் திரு. பி. சிதம்பரம் நேற்று சென்னையில் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினர்.

(12 ம் பக்கம் பார்க்க)

வல்வெட்டித்துறையில் நேற்று

# இராணுவம் - விடுதலைப்புலிகள் நேரடி மோதலில் நால்வர் பலி

(வல்வெட்டித்துறை)

**வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து தெற்குப்புறமாகவும், கிழக்குப் புறமாகவும் இருபிரிவாக நேற்று அதிகாலை புறப்பட்ட இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த போராளிகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக இடம்பெற்ற தாக்குதலின் போது நான்கு இராணுவத்தினர் பலியானதாகத் தெரியவருகிறது.**

கடற்படைக் கப்பல்களிலிருந்து நேற்றுமுன்தினம் வல்வை இராணுவமுகாமுக்குப் புதிதாக மாற்றஞ்செய்யப்பட்ட இராணுவத்தினர்சிலர் முகாமிலிருந்து புறப்பட்டு இரு திசைகளால்வெளியேவர முயன்ற பொழுது தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்கியதல் நான்கு இராணுவச்சிப்பாய்கள் பலியானதாகத் தெரியவருகின்றது.

முகாமுக்கு 200யார் தூரத்தில் பலியான நான்கு இராணுவத்தினர்களின் சடலங்கள் இருந்தபோதிலும் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதல்கள் காரணமாக சடலங்களை எடுத்துச்செல்லும் முயற்சியைக் கைவிட்டு மற்றய இராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பியதாகவும் தெரியவருகின்றது.

நேற்று அதிகாலை சுமார் 6 மணியவில் வல்வை இராணுவ முகாமின் தெற்குப் புறமாக வெளியே புறப்பட்ட சில இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள், தாக்கிய

[12ம் பக்கம் பார்க்க]

ஹொறவப்பொத்தானையில்

## ஊர்காவல் படையினர் மீது போராளிகள் தாக்குதல்

[யாழ்ப்பாணப்]

ஹொறவப்பொத்தானையில் நேற்றுக்காலை கடமையிலீடுபட்டிருந்த ஊர்காவல் படையினரை நோக்கி போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இத்தாக்குதலின்போது தாங்கள் வைத்திருந்த வேட்டைத் துப்பாக்கிகளையும் கைவிட்டு விட்டு ஊர்காவல் படையினர் காயங்களுடன் தலைமறைவாகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குலை மேற்கொண்டிருந்த போராளிகள் ஊர்காவல் படையினர் விட்டுச்சென்ற 'ஷொட்கண்' துப்பாக்கிகளைக் கைப்பறிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [மா]

கிளிநொச்சியில் மீண்டும்

## ஷெல், பீரங்கித் தாக்குதல்; பதற்றத்தின்மத்தியில்மக்கள்

[கே. வி. கே. திருலோகமூர்த்தி]

கிளிநொச்சிநகர் பகுதியில் தொடர்ந்து குண்டுச் சத்தங்கள் கேட்டபடி இருக்கும் அதேவேளை நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சன நடமாட்டம் இன்றி வெறிச்சோடி காணப்படுகிறது.

நேற்றுமுன்தினம்மாலைமுதல் இரவு பூராகவும் இராணுவ முகாமிலிருந்து கிராமங்களை நோக்கி 'ஷெல்' த்தாக்குதலும் பீரங்கித்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு பதில் தாக்குதலை போராளிகள் மேற்கொண்டனர்.

(12ம் பக்கம் பார்க்க)

பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா, லிபியா

ஆகிய நாடுகளுக்கு உடனடியாக பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்க:

திரு. A. P. தங்கவேலாயுதம்,
கோகுல வீதி, கோண்டாவில்.

திரு. M. சாந்திராஜ்,
"கணநாதம்"
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(C 2892)

## ஊரடங்குச் சட்டம்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றிரவு எட்டுமணி தொடக்கம் இன்று காலைஆறு மணிவரையும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நேற்

(12ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சியில்

## போக்குவரத்துத் தடை

[வவனியா]

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற நேரடிமோதலைத் தொடர்ந்து கிளிநொச்சியூடான சகலபோக்குவரத்தும் தடைசெய்யப்பட்டிருந்தன.

பரந்தன் வீதிகளில் பாரிய தடைகள்போட்டு இளைஞர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வவனியாவந்த சகல வாகனங்களையும் வேறுபாதைகளூடாகத் திருப்பிவிட்டனர். (து

### இறம்பைக்குளத்தில் பதற்றம்

[வவனியா]

வவனியர் இறம்பைக்குளம் பகுதியில் நேற்றுக்காலை கவச வாகனங்கள்சகிதம் கறுப்புச் சட்டைக்காரரும் இராணுவத்தினரும் வந்திறங்கி சோதனை நடாத்தினர். இதனால் இப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது [து]

### தொலைபேசி பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலிருந்து வடக்கு

(12ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சியில் நேற்று

## 'இராணுவத்திற்கு பலத்த சேதம் எமது தரப்பில் ஒருவர் பலி'

### புலிகள் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை வெளிவரவிருந்த இராணுவத்தினரை நோக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலைத் தொடர்ந்து இருதரப்பினருக்குமிடையே பலத்த துப்பாக்கிச்சூட்டுச் சமர் இடம்பெற்றது.

இந்த நேரடி மோதல் சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள்' அரசியல் பிரிவு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 'கிளிநொசசி இராணுவமுகாமிலிருந்து இராணுவத்தினர் வெளிவந்த பொழுது எமது இயக்கப் போராளிகள் எதிர்த்தாக்குல் நடாத்தினர். இத்தாக்குதலின் போது இடம்பெற்ற நேரடி மோதலில் எமது இயக்கத்தைச் சேர்ந்த சூட்டி (தர்மபுரம்) என்பவர்

(12ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

2 அறைகள் கொண்ட வீட்டுடன் 1½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. I. Watson, Ark Lane, Uduvil. [C 2897]

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. M. மீனு, 86, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (C-2830)

நல்ல இன இரண்டுமாத கடுவன் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு: தொடர்பு நேரில். M. A. கனகரட்ணம், நியூரோட், ஆறுகால்மடம். C-2861

K. K. S. Rd, கோபால் ஒழுங்கையில் ஒருபரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 23, கடைச்சாமி ரோட், நீராவியடி, யாழ்ப்பாணம். C-2850

நாரந்தனை மத்தியில் 10பரப்புத் தோட்டக்காணி சிறிய வீட்டுடன் கிணறு, மலசலகூட வசதியுடனும் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். மா. சற்குணன், சங்குவேலி, மானிப்பாய். C-2860

மாகியம்பதி கந்தரோடை ரோட்டில் நன்னீர்க்கிணற்றுடன் காணியும், வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. அப்புத்துரை மாஸ்டர், ''மலர் இல்லம்'', அளவெட்டி தெற்கு. C-2846

லவ் பேட்ஸ் பறவைக்குரிய முக்கிய சாப்பாடு சாமை எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு: கந்தசாமி அன் சன்ஸ், நல்லூர் மார்கட், கல்வியங்காட்டுச் சந்தி, கல்வியங்காடு. C-2866

புதியசோனி 27 ''(2760) Colour T,V Remote Control உடன் விற்பனைக்குண்டு. 14'' 17'' 20'' நல்ல T V யுடன் மாற்றம் செய்வதற்கு பரிசீலிக்கப்படும். விபரங்கட்கு சமுத்திரா மல்ரி சேவிஸ், 303, பலாலிவீதி, கோண்டாவில் சந்தி. (C-2872)

நல்ல இன, 8 வாரம் சென்ற பூச்சி அகற்றிய அழகான அல்சேஷன் (Alsation) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. அரியரெத்தினம், மாக்கற் ரோட் (பேக்கரி முன்பாக) கொக்குவில் மேற்கு. (C-2880)

உறுதி எழுத்தாளர்கள் [நொத்தாரிசுமார்] எம்மிடம் அறுதி, நன்கொடை, சீதனம், ஈடு, அற்ரோனித்தத்துவம், ஆதிய உறுதிகள் எழுதுவதற்கான படிவங்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். நல்ல தரமான லெஜர் பேப்பரில் அச்சிடப்படுகின்றது. 1 செட்டின் (மூன்று பிரதிகள்) ரூபா 2/50. 100 செட்டின் விலை ரூபா 225/-. ஆங்கிலத்திலும் உண்டு. தொகையாக வாங்குவோர்களுக்கு நேரில் விநியோகிக்கலாம். சிவா பிறிண்டேர்ஸ், 41, மெயின் வீதி, கைதடி. C-2844

## விற்பனைக்கு

சங்குவேலியில் பழைய உபதபாற் கந்தோருக்கு முன்பாக 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: உப-அஞ்சல் அதிபர், சங்குவேலி தெற்கு, மானிப்பாய். [C 2891]

சிறுப்பிட்டி மேற்கு இராஜ வீதியில் 6 பரப்புக்காணி [நிலாவரைக்கு அண்மையில்] விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும்: வே. திருப்பரங்குன்றம், சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. [C 2878]

Bairaha Farms புரொயிலர் குஞ்சு விநியோக திகதி யூன் 27 க்கும் Shetna Farm பிறவுண் பேட்டுக்குஞ்சு விநியோக திகதி யூலை முதல் வாரத்திற்கும் பின்போடப்பட்டுள்ளதை முற்பணம் செலுத்தியவர்களுக்கு அறியத்தருகிறோம். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [C 2896]

## தேவை

பாவித்த வீட்டுப்பாவனைப் பொருட்கள், தளபாடங்கள் எலக்ரிக்பொருட்கள் றேடியோ முதலியன உடன் தேவை. M. Thiagarajaa, 125, Main Street, Jaffna C-2890

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) உடன் தேவை. தொடர்பு கொள்ளவும். Fudo Enterprise, 39/17, மின்சார நிலைய வீதி, (3ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம். C-2883

## மணப்பந்தல்

யாழ்ப்பாண கிறிஸ்டியன் வேளாள ஆசிரியைக்கு 34-42 வயதுக்குட்பட்ட T. A பட்டதாரி மணமகன் தேவை. Accountant சகோதரனுக்கு 34 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. மாற்றுச் சம்பந்தத்தை யோசிக்கலாம். கிறிஸ்டியன் அல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். எம்மிடம் சகல இன மதத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். விண்ணப்பிக்கவும். மங்கள ஏஜென்ஸி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [C 2764]

## தவறிவிட்டது

11-06-86 தட்டா தெருச் சந்திக்கும் கந்தரோடைச் சந்திக்கும் இடையில் பிறந்த தின படங்கள் முப்பதுடன், நெகடிவும், அல்பத்துடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். கணேசன் ஆர்ட் ஸ்ரூடியோ, K. K. S. ரோட், கொக்குவில் அல்லது முருகன் ஆபரண மகால், சுன்னாகம். (C-2869)

## வாடகைக்கு

உரும்பராயில் நவீன வசதிகளுடன் கூடிய பகுதி வீடு மூன்று அறைகளுடன் வாடகைக்குண்டு. சிறியகுடும்பம் விரும்பத்தக்கது. தொடர்பு: சி. மகேஸ்வரா, 'அன்னவிலா' கற்பகப்பிள்ளையார் கோயில் ஒழுங்கை, உரும்பராய். C-2804

## காணவில்லை

வவனியா நெளுக்குளத்தைச் சேர்ந்த விஜயலட்சுமி வயது 9 என்பவர் 12-6-86 முதல் 99/7, பிறவுண் வீதியில் உள்ள இல்லத்தில் இருந்து காணமல் போய்விட்டார். அவரைக்கண்டால் தயவுசெய்து வன்னியசிங்கம் 99/7, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு உடன் தொடர்பு கொள்ளவும். C-2895

## வகுப்புகள்

ரேடியோ, ரெலிவிஷன் நேரடியாகவும், தபால் மூலமாகவும் செய்முறைப் பயிற்சியுடன் கற்பிக்கப்படும். விபரங்கட்கு: எலக்ரோனிக் ரெயினிங் சென்றர், வி. நித்தியானந்தன், கல்வளை, சண்டிலிப்பாய். (C- 2841)

9, 10 ம் வகுப்புகளுக்கான ஆங்கிலம், வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய எல்லாப் பாடங்களுக்கும் அனுபவமிக்க ஆசிரியர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. ஹரிஹரன் அக்கடமி, 337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம். (C-2889)

ரேடியோ and ரீ.வி. (டெக்) வயறிங், வெல்டிங், மோட்டார்மெக்கானிசம், பிளம்பிங், வாகனங்களுக்கான வயறிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, புதிய பிரிவுகள் குறைந்த கட்டணத்துடன் ஆரம்பமாகின்றன, அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C-2786

## கல்வி

இந்தியாவில் தொழிற்கல்வி உயர்கல்வி பயிலவிரும்புவோர்களுக்கும் எல்லா London பரீட்சைகளுக்கும் பயிற்சியளித்து பரீட்சை எடுப்பதற்கு சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும், விடுதிவசதியும் உண்டு. விபரங்களுக்கு: ஹரிஹரன் என்ரபிறைஸ், 337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. யாழ்ப்பாணம். C-2888

## சேவை

தரமான ''போட்டோஸ்ரற்'' பிரதிகள், தெளிவான ''ரோனியோ'' பிரதிகள் தமிழ்—ஆங்கில ''ரைப்பிங்'' வேலைகளுக்கு: கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [A-825]

அரிய சந்தர்ப்பம், யாழ். நகரில் மாணவிகள், பெண் உத்தியோகஸ்தர்கள் சிறந்த முறையில் உண்பதற்கும், தங்குவதற்கும் (Food and Lodging) இடவசதி உண்டு. 67, விக்டோரியா ரோட், யாழ்ப்பாணம். [C-2885]

# 'மீண்டும் ஒரு இனக்கலவரம் ஏற்பட அனுமதிக்கமுடியாது'

## — தெமட்டகொடையில் ஜனாதிபதி

(கொழும்பு)

''1983ம் ஆண்டு இந்த நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரம் போன்று மீண்டும் ஒரு இனக்கலவரம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் தனது முழு அளவிலான சக்தியையும் பயன்படுத்தும்''

தெமட்டகொடையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இவ்வாறு கூறினார்.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி ஜயவர்த்தன மேலும் பேசியதாவது: ''இன்றைய நெருக்கடியான நிலையில் திருமதி பண்டாரநாயக்கா நாடு முழுவதும் சென்று அரசாங்கத்தைக் குறைகூறிவருவதை அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டாது. திருமதி பண்டாரநாயக்காவின் இத்தகைய செயல் 1983ம் ஆண்டு ஏற்பட்டதைப்போன்று ஒரு இரத்தக்களரியை உருவாக்குவதாக இருப்பதால் அவ்விதமான ஒரு நிகழ்ச்சி நடைபெறுமல் தடுப்பதற்கு அரசாங்கம் தனது முழு சக்தியையும் பாவிக்கும்'' என்று கூறினார்.

பிரதமமந்திரி ஆர். பிரேமதாசா பேசுகையில் நாட்டின் அமைதிக்கும் ஒழுக்கத்திற்கும் இன்று பெரும் அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளது. இந்தநிலையில் அரசியல்லாபம் தேட நினைப்பவர்கள் மிகவும் ஆபத்தான பயங்கரவாதிகள் என்று கூறினார்.

இக்கூட்டத்தில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத்முதலி, நீதியமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தின, காணி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசநாயக்கா ஆகியோரும் உரையாற்றினார்கள். (வா)

## பாடசாலை கட்டடத்திற்கு நிதி ஒதுக்கீடு

[பண்டத்தரிப்பு]

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டு வரும் மாடிக் கட்டிட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு யாழ். கல்வித் திணைக்களம் 2 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

## ஓய்வூதியம் பெறுவோர் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

வேலணை ப. நோ.கூ. சங்க நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்ற கிராமிய வங்கி முகாமையாளர் கடமைக்கு வராததினால் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை உரியவர்களுக்கு கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானால் உடனடியாக ஓய்வூதிய கொடுப்பனவுக்குரியவர்களுக்கு காலதாமதமின்றி பணத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகளை சங்கத்தின் தற்போதைய பொதுமுகாமையாளர் திரு. இரா. லோகநாதன் செய்துவருகின்றார். (க)


கனடா—டென்மார்க்

பிரயாண ஒழுங்குகள்

கனடா, டென்மார்க் ஆகிய இடங்களுக்கு உடனடிப் பிரயாண ஒழுங்குகள் உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

அத்துடன் சவூதி அரேபியாவுக்கு தச்சு வேலை தொழிலாளர் பதவிக்கு வெற்றிடங்கள் குறிப்பிட்டளவு கையிருப்பில் உண்டு.

மற்றும் பாஸ்போர்ட், பொன்ட் ஆகியனவும் செய்து தரப்படும்.

தொடர்பு:- N. பாலா,
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
பிற் குறிப்பு:- (பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமை) [C-2812]



★ சுவீடன் ★ டென்மார்க்

செல்ல விரும்புபவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளவும்.

மற்றும்

★ பிரான்ஸ் ★ இத்தாலி
★ ஜேர்மனி ★ சுவிஸ்

ஆகிய நாடுகளிற்கு எமது பிரதிநிதி உங்களை வெகுவிரைவில் அழைத்துச்செல்வார்.

அத்துடன், அவுஸ்திரேலியாவிற்கு விசா எடுத்தும் கனடா செல்வதற்கு பிரயாண ஒழுங்குகள் செய்தும் கொடுக்கப்படும்.

பாஸ்போட், பொன்ட், விசா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

லிப்ரூஸ் லிமிற்ரெட்

R. G. கட்டடம்,
இல.70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

2 nd Floor, York Building,
No: 94 1/7, York Street,
Colombo — 1
Tele. No: 25508
[A-731]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெ. ஆபிரிக்க அதிபர் போத்தாவுடன்

## இனஒதுக்கல் எதிர்ப்புத்தலைவர் பிஷப் டுட்டு சந்திப்பு

### கடும் அவசரகாலச் சட்டங்கள் அமுல்

பிரிட்டோரியா, ஜூன் 14 தென்னுபிரிக்க அதிபர் திரு. போத்தாவும், நோபல் பரிசுபெற்றவரும் தென்னுபிரிக்க இன ஒதுக்கலுக்கு எதிரான பிரபலத் தலைவருமான பிஷப் டெஸ்மன்ட் டுட்டுவும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சந்திப்பு சுமூகமான நிலையில் சுமார் 90 நிமிடங்கள் நடைபெற்றது. இரு தலைவர்களின் இச் சந்திப்பு எதிர்பாராதவகையில் திடீரென நிகழ்ந்த ஒன்ருகும்.

பிரிக்க அரசு அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தென்னுபிரிக்காவில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும சுமார் இரண்டாயிரம் பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 79 பள்ளிக்கூட மாணவர்களும் அடங்குவர்.

கடுமையான பத்திரிகைத் தணிக்கை அமுல்நடத்தப்பட்டுள்ளமையினுல் போத்தா அரசுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றிய விபரம் ஒன்றினையும் வெளியுலகு அறியமுடியாத நிலையிலுள்ளதாக கூறப்பட்டது.

குறிப்பாக பிஷப் டெஸ்மன்ட் டுட்டுவின்பத்திரிகை செய்திகூட தணிக்கை செய்யப்பட்டுள்ளதுடன் பீ. பீ. சிக்கு அவர் அளித்த செய்திக் குறிப்புக்கள் கூட பிரசுரிக்கப்படவில்லை.

அவசரகாலநிலையை பிரகடனப்படுத்தி கடுமையான சட்டதிட்டங்களை போத்தா அரசு கடைப்பிடித்துவருவதையிட்டு சோவியத்யூனியன், அமெரிக்கா, சீனு ஆகிய நாடுகள் தமது பலத்த கண்டனத்தை தெரிவித்துள்ளன உலகம் தழுவிய கிளர்ச்சி ஒன்றுக்கு போத்தா அரசு திட்டமிட்டு செயல்பட்டுவருவதாக அந் நாடுகள் கண்டனத்தில் குறிப்பிட்டுள்ளன. (ரா)

## உலகச் செய்திகள்

நாட்டின் நெருக்கடிநிலை பற்றியும் குறிப்பாக 1976ம் ஆண்டு சுவேட்டோ சழகத்தின் நினைவுநாளையொட்டி எதிர்வரும் திங்கட்கிழமையன்று கூட்டம் நடத்த அரசு தடைவிதித்திருப்பதுபற்றிஇரு தலைவர்களும் விவாதித்தார்கள் ஆனுல் இக் கூட்டத்தினை நடத்துவது பற்றி இரு தலைவர்களின் கருத்துக்களும் வேறுபட்டே இருந்ததாக கூறப்படுகின்றது.

அடுத்தவாரத்தில் நடைபெறவிருக்கும் இந்த சுவேட்டோ ஆண்டுத் தினத்தில் வன்முறைச்சம்பவங்கள் இடம்பெறலாம் என்று தென்னு

### இலங்கை இனபபிரச்னை

## நியாயமான தீர்வுக்கு பிர ான்சும் வலியுறுத்து

பாரிஸ்- ஜூன்- 14

"இலங்கை இனப் பிரச்னையில் நியாயமான தீர்வொன்று வெகு விரைவில் காணப்படல் வேண்டியது மிக மிக அவசியமாகும்" என்று பிரான்ஸின் வெளியுறவு அமைச்சர் திரு லாம் பெர்னுல் ரெய் மாண்டோ கூறியுள்ளார்.

தற்பொழுது உத்தியோகபூர்வ விஜய மொன்றினை மேற்கொண்டு பிரான்ஸ் சென்றுள்ள இந்திய உப ஜனுதிபதி திரு. வெங்கட்ராமன் பிரான்சின் வெளியுறவு அமைச்சர் திரு லாம் பெர்னுல் ரெய் மாண்டோவை நேற்று முன்தினம் சந்தித்தார், அப்பொழுதே திரு ரெய் மாண்டோ இதனைத தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பின்போது இவ்விரு நாடுகளும் தீவிர அக்கறை கொண்டுள்ள சர்வதேசப் பிரச்னைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன் தென்னுபிரிக்காப் பிரச்னை பற்றிய வடயங்களும் விவாதிக்கப்பட்டதாக கூறப்பட்டது. (ரா)

### பிரிட்டிஷ் பொருளாதாரத்தில்

## திடீர் பணவீக்கம்

லண்டன், ஜூன் 14 கடந்த பதினெட்டு ஆண்டுகளுக்கு அதிகமான கால இடைவெளிக்குள் பிரிட்டிஷ் பொருளாதார நிலைமையில் 2. 8 வீத பணவீக்க வீழ்ச்சியடைந்துள்ளது.

பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதே தமது பொருளாதாரக் கொள்கையின் முக்கிய அம்சம்'' என்று பிரதமர் மார்க்ரெட் தாட்சரும் அவரது அரசாங்கமும் கூறியுள்ள போதும் இந்த நடவடிக்கை, வேலையில்லாப் பிரச்னையை மேலும் தீவிரப்படுத்தும்என்று அரசியல்வட்டாரங்கள் குறை தெரிவித்துள்ளன.

20 வீதம் அதிகமாக இருந்த பணவீக்கத்தை அரசாங்கம் மிகவும் குறைந்த நிலைக்கு கொண்டுவந்துள்ளது எனினும் இவ்வாண்டு இறுதியில் பணவீக்கம் சிறிதளவு அதிகரிக்கும் என்று அவதானிகள் கூறியுள்ளபோதிலும் அரசாங்கம அதனை 3 1/2சதவீதம்வரை குறைவான நிலையில் வைத்திருககமுடியுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ரா)

### தடையற்ற வர்த்தகக் கொள்கையை

## சீனு மாற்றிக்கொள்ளாது

பீக்கிங், ஜூன் 14 "சீனு மேற்கத்திய நாடுகளுடனுன தடையற்ற வர்த்தகக் கொள்கையை ஒரு போதும் மாற்றிக்கொள்ளாது" என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. குயாவோ பெங் உறுதியளித்துள்ளார்.

எனினும் அதனுடைய சீர்திருத்தவேலைகள் யாவும் முன்னைய காலங்களைவிட இவ்வாண்டில் மந்தமான நிலையிலேயே அமுல்நடத்தப்படும் என்று கூறப்பட்டது.

மேற்கு ஜெர்மன் தலைவர் திரு. ஹெல்மட் கோல் இது குறித்து சீனத் தலைவருடன் பேச்சுவார்த்தை ஒன்றினை நடத்தினுர். இதன்பின் திரு. கோல் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியொன்றில் சடுதியான கொள்கை மாற்றங்களினுல் சீனுவில் செய்யப்படும் முதலீடுகள் ஆபத்தை எதிர்நோக்க நேரிடும் என்று மேற்குலக நாடுகள் அஞ்சத் தேவையில்லையென்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பொன் க்கும் பீக்கிங்கிற்கும் இடையிலான வர்த்தகத்தை அதிகரிப்பது' சர்வதேச பிரச்னைகளான ஆயுதக் குறைப்பு மற்றும் மேற்கு ஐரோப்பா விவகாரங்களில் மும்முரமாக ஈடுபடல்வேண்டும் என்ற சீனுவின் ஆவல்பற்றிய பலதரப்பட்ட விடயங்களும் சீன, மேற்கு ஜேர்மன் தலைவர்களால் விரிவாக ஆராயப்பட்டது. (ரா)

### யாழ். வைத்தீஸ்வரா உயர்தரமாணவர் விருந்துவைபவம் 17ம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலய உயர்தர

[10-ம் பக்கம் பாரிக்க]

### குருநகர் மீனவருக்கு

## பல்கலைக்கழக மாணவர் ரூ. 25 ஆயிரம் நிதி உதவி

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவில கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட குருநகரைச் சேர்ந்த 30 மீனவக் குடும்பங்களுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 25 ஆயிரம் ரூபாவை நேற்று நிவாரண நிதியாக வழங்கியுள்ளனர்.

யாழ் ஆயர் வண. தியோகுப்பிள்ளை ஆண்டகையிடம் அவரது இல்லத்தில்வைத்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இப் பணத்தொகையை நேற்றுமாலை வழங்கினர், [மா]

## "இன்றைய போரில் தொழிலாளரும் பங்கேற்க வேண்டும்"

(சாவகச்சேரி)

"உழைப்புக்காக கடலில் மீன் பிடிக்கச் சென்ற எமது கடற்றொழிலாளர்களால் மண்டைதீவுககடலில் வைத்து கறுப்புடையணிந்தவர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவமானது இன்றைய போராட்டத்தில் தொழிலாளர்களும் பங்கேற்க வேண்டுமென்பதை காட்டியுள்ளது."

இவ்வாறு கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூகநிலையம்குருநகர் கடற்றொழிலாளர்கொலை செய்யப்பட்டது தொடர்பாக விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

### உதைபந்தாட்டம்:

## டென்மார்க் வெற்றி

[மெக்ஸிக்கோ]

மெக்ஸிக்கோவில் நடைபெற்றுவரும் 'உலகக்கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியின் முதலாவது சுற்றுப போட்டியின் கடைசி ஆட்டங்கள் நேற்று முன்தினம் முடிவடைந்தன.

டென்மார்க்கும் - மே ஜேர்மனிக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில், டென்மார்க் வெற்றி பெற்றுள்ளது.

உருகுவேக்கும் - ஸ்கொட்லண்டுக்குமிடையில்நடைபெற்ற ஆட்டத்தில் இரு கோஷ்டியினரும் கோல்கள் போடாக நிலையில் ஆட்டம் வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது. (வி)

## மண் அள்ளி வந்தோர் கடலில் மூழ்கி மரணம்

[வேலணை]

எழுவைதீவில் இருந்து பருத்தித் தீவுக்கு ஊரிமண் ஏற்றிச் சென்ற படகொன்று ஊரிமண் ஏற்றிக் கொண்டு வருமபோது நடுக்கடலில் மூழ்கியதால் அதில் சென்றவர்களில் மூவர் மரணமானுர்கள். இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை எழுவைதீவு பருத்தித்தீவுக்கு இடைப்பட்ட கடல் பகுதியில் இடம் பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-வீடு கட்டுவதற்காக எழுவைதீவில் இருந்து பிளாஸ்டிக்படகொன்றில ஏழுபேர் கொண்ட குழுவொன்று பருத்தித் தீவுக்குச் சென்று அங்கு ஊரிமண்ணை ஏற்றிக்கொண்டு வந்துள்ளது.

படகில் பாரம் அதிகமாக இருந்ததால் நடுக்கடலில் அது கவிழ்ந்து விட்டது. அதில் இருந்த ஏழுபேர்களும் படகுடன் கடலில மூழ்கினுர்கள். அவர்களில் மூவர் மரணமடைந்தனர். நால்வர் நீந்திக் கரை சேர்தனர்.

மரணமானவர்கள் அ. இராசேந்திரன் [70 வயது], இ. ஜெயராஜா [2? வயது], இ. ஞானசீலன் [28 வயது] இவர் ஒரு ஆண்குழந்தைக்கு தந்தையானவர் இறந்த இராசேந்திரம் என்பவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது மற்றைய இரு சடலங்களையும் உறவினர் தேடிவருகின்றனர்.

மற்றும் உயிர்தப்பிய நால்வரின் பெயர்கள் வருமாறு:- கிங்ஸ்லிபெர்னுண்டோ, அ. யேக்கப் பெர்னுண்டோ, இ சிங்கராசா, எஸ். லூர்த்நாயகம்.

### விமர்சன அரங்கு

[யாழ்ப்பாணம்]

நெஞ்சை மிதித்த அந்த நினைவுகள், நெருப்பையும் சுடும் வேதனைகள், ஈழம் என்னை அழைக்கிறது ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகளின் விமர்சன அரங்கொன்றினை கிராமிய கலைக்குழுவினர் நடாத்தவுள்ளனர்.

இம் மாதம் 21-ம்திகதி காலை 9 மணிக்கு உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில நடைபெறவுள்ள இவ் விமர்சன அரங்கில் பிரபல எழுத்தாளர்கள் பலர் கலந்து கொள்வார்கள். (ஐ)

### வல்வெட்டித்துறை

## பாடசாலைகள் தொடர்ந்து மூடப்படும் நிலை

[வல்வெட்டித்துறை]

வல்வெட்டித்துறையிலும் அதன் சுற்றுப்பகுதிகளிலும் கடந்த மூன்றுநான்கு தினங்களாக நடைபெறும் பதற்ற நிலை நீடிக்குமாயின் அடுத்த வாரமும் பாடசாலைகள் நடைபெறமாட்டாது என தெரியவருகிறது,

இங்கு நடைபெற்ற முப்படை தாக்குதல்களினுல் பல பாடசாலைகள சேதமடைந்துள்ளன. அத்துடன் அதிகாலையிலேயே ஏற்படும் பொம்பர், சீ-பிளேன், ஹெலி இரைச்சல்களாலும், கடற்படைக் கப்பல்களின் இரைச்கல்களாலும் அதிகாலையிலேயே மக்கள் இடம்பெயர்ந்து செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இந்நிலை நீடிக்குமாயின பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பமாட்டார்கள். போக்குவரத்து வசதிகளும் இருக்கமாட்டாது. இது போன்ற காரணங்களினுல் இப்பகுதியிலும் சுற்றுப்புறங்களிலுமுள்ள பாடசாலைகள் அடுத்தவாரமும் மூடப்படும் நிலைமை ஏற்படலாம் எனத் தெரியவருகிறது.

## இலவச வினுவிடை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

வரும் ஆவணியில் நடைபெறவுள்ள க. பொ. த உயர்தர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான இலவச மாதிரி வினு-விடை வகுப்புக்கள் "பொன்ட்" கல்விநிலையத்தில் இம்மாதம் 18ம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹீரோயின் பவுடர் கொண்டுவரும் தாழ்வு : வாலிபர்களே உஷார்!

வாலிப வயதில் எதுதீயதோ அதைப் பரீட்சித்துப் பார்க்கவேணுமென்ற அவா இளைஞர்களிடமும் இளம் பெண்களிடமும் காணப்படுகிறது. உதாரணமாக சிகரட் பிடித்தல், மதுபானம் அருந்துதல், போதைவஸ்த்துப் பாவனை போன்றவை பரீட்சார்த்த ரீதியில் தோன்றி நிரந்தரமாக பழக்கவழக்கத்தில் ஏற்படக்கூடும் இந்த அவா எல்லா நபர்களிடமும் ஏற்படுவதில்லை. இதற்குக் காரணம் சிலரின் தன்னம்பிக்கையின்மை, பலவீனமான குறைபாடுகள் முதலியவை சிலரிடம் காணப்படுவதேயாகும்.

## வயதுக் கோளாறு

வாலிப வயதில் இயற்கை மனோநிலையை மாற்றி ஒரு செயற்கை மனோநிலையை ஏற்படுத்தும் அவா ஏற்படுகிறது. இது பின்பு நிரந்தரத் தீய பழக்கங்களுக்கு அடிகோலி விடுகிறது. அநேகமாக போதைவஸ்து பாவனை 15 முதல் 30 வயது வரையுள்ள வாலிப வயதினரிடமே காணப்படுகிறது.

## வெளிநாட்டுவேலையால் தொற்றியது போதை

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏற்பட்டதன் பின்பே யாழ்ப்பாணத்தில் போதை வஸ்து பாவிப்பதற்கான அறிகுறிகள் முதலில் தோன்றத் தொடங்கின அநேகமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பைநாடி பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் நடுக்கடலில் விடப்பட்ட இளைஞர்களே முதன் முதலில் இந்தப்பழக்கத்தை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தினார்கள். ஆனால் இப்பழக்கம் அசுர வேகத்தில் முன்னேறியது. இன்று இதனால் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் எத்தனையே இளைஞர்கள் அவஸ்தைப்படுகிறார்கள்.

இன்று எமது சமூகத்தில் மிகவும் தீய விளைவுகளை ஏற்படுத்தும் போதைவஸ்துக்களில் அபின் [Opium) ரகத்தைச் சேர்ந்த ஹீரோயின் (Heroin) மருந்தே முதலிடத்தைவகிக்கிறது. இது அநேகமாக ஒருவெள்ளை நிறத் தூளாக விற்கப்படுகிறது. இதை சிகரட்டிலோ. பீடியிலோ அடைத்தே பத்துகிறார்கள். இது ஊசிமூலமும் உடம்பில் ஏற்றப்படலாம். இதைப் பாவிப்பவர்கள் தமது சொந்தப்பணத்தைச்செலவழித்து தமது நண்பர்களையும் இத் தீய பழக்கத்தில் ஈடுபடச் செய்கிறார்கள். ஒருசிலரைத் தவிர எந்த வைத்தியசிகிச்சை மூலமும் இத்தீய பழக்கத்தைப் பழகியவர்கள் இதிலிருந்து விடுபட்டதாய் தெரியவில்லை. வைத்தியசிகிச்சையை நாடுபவர்களும் கூடியபட்சம் ஒருநாளுக்குமேல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்குத் தங்கியிருந்ததற்கு எதுவித ஆதாரமுமில்லை இதற்குக் காரணம் போதைவஸ்த்து இல்லாமல் அவர்களால் ஒரு சிலமணி நேரங்களுக்குக் கூட தனித்து இயங்க முடியாமையே!

## அதிகளவு மருந்து தேவைப்படும் நிலை

இதுமட்டுமல்லாமல் ஹீரோயின் பாவிப்பவர்களுக்கு நாட்செல்ல செல்ல தேவைப்படும் மருந்தின் அளவும் கூடிக்கொண்டே போகிறது. அத்துடன் காலப்போக்கில் ஒரு சில மணிநேரங்களுக்கே மருந்து உடம்பில் தன்பலனைக் கொடுக்கிறது. இதனால் போதைவஸ்துக்கே அடிமையாகி அதிலிருந்து விடுபட முடியாமல் அவஸ்தைப் படும் வாலிபர்கள் நடைப்பிணங்களாய் சமூகத்துக்கு ஒரு சாபக்கேடாக அமைகிறார்கள்.

ஹீரோயின் உளச் செயற்பாட்டையும், உடற் செயற்பாட்டையும் முற்றாக மாற்றி, அஃதின்றி இயங்க முடியாத நிலைக்கு அதன் பாவனையாளர்களை விடுகிறது. இதன் தீமைகளிலிருந்து சமூகத்தைக் காப்பாற்ற மிக உன்னதவழி இதன் விற்பனையைத் தடை செய்வதேயாகும்.

## மாற்றுத்திட்டம்

அப்படியானால் இப்பழக்கத்திற்கு அடிமையானவர்களை என்ன செய்வது என்ற கேள்வி எழுகின்றது. அந்தக் கட்டத்தில் தான் தகுந்த வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும் நாடப்படல் வேண்டும். குறைந்த பட்சம் ஹீரோயினுக்கு அடிமையானவர்கள் மூன்று மாத காலம் ஆஸ்பத்திரியில் தங்கியிருக்க வேண்டிய அவசியம் உண்டு. Methadone என்னும் வில்லைகளின் மூலம் ஹீரோயின் பாவித்தால் ஏற்படும் தீய விளைவுகளை அநேகமாகக் கட்டுப்படுத்தலாம். ஆனால் இச் சிகிச்சைக்கு பாதிக்கப்பட்டவரின் ஒத்துழைப்பும், வைத்தியரின் திறமையும் மிகவும் அவசியம். காலப்போக்கில் தீய விளைவுகளை குறைந்துபோய் பின்பு அற்றுப்போய் விடும் என்பதனை வைத்தியர் ஆலோசனை மூலம் வலியுறுத்துதல் வேண்டும்.

## பக்க நோய்கள்

போதைமருந்தை ஊசிமூலம் ஏற்றுவதலால், ஏற்றும் இடத்தில் சீழ் கட்டலாம். இலகுவில் மாறாத பெரிய புண்களும் ஏற்படலாம். ஏற்பு நோய் ஏற்படவும் கூடும். மற்றும் ஊசிமூலம் தோன்றும் செங்கண்மாரி [Serum Hebatitis] மேக நோய்கள் பரவவும் கூடும்.

தீய விளைவுகள் மேற் கூறப்பட்டபடி மனதையும், உடலையும் பாதிக்கின்றன. மனோ ரீதியில் அமைதியின்மை, பீதி, மனச்சோர்வு, தனித்தியங்க முடியாமை, என்பன ஏற்படுகின்றன உடல் ரீதியில், வயிற்றில் தாங்க முடியாதவலி, கால்களில் விசேஷமாகத் தொடைகளில் தாங்க முடியாத உளைவு, ஓங்காளம், வயிற்றுப் போக்கு, தும்மல், மூக்கால் நீர் சிந்துதல், மயிர்சிலிர்த்தல், அதிகமாக வியர்த்தல் நித்திரையின்மை எரிச்சல், கண்கரித்தலும், கண்ணீர் சொரிதலும், கொட்டாவி விடுதல், ஏவறை விடுதல் இருதயம் வேகமாக அடித்தல், இரத்த அமுக்கம் அதிகரித்தல் போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன. சிலருக்கு உடம்பில் ஏதோ மாற்றம் ஏற்பட்டு [Deperson Alizat-ion] சுரணை இல்லாதது போல் இருக்கும். இதன் காரணமாக இவர்கள், சவர அலகுகளாலும் Blade ஊசிகளாலும் தங்களை சின்னபின்னமாகக் காயப்படுத்திக் கொள்ளலாம்.

## மலச்சிக்கல்

போதை வஸ்துக்களை பாவிக்கும்போது மலச்சிக்கல், சிறுநீர் கழிப்பது கஷ்டம் போன்றவை ஏற்படலாம். கண்ணில் கருமணியில் இருக்கும் பாவை (pupil) மிகவும் சிறியதாகத் தோன்றும்.

அபின் துஷ்பிரயோகம் அநேகமாக முதியவர்களிடமே காணப்படுகிறது. இது தாங்கொணாத வலிக்கு சுதேச வைத்தியர்களால் கொடுக்கப்படும் அபின் பாவனையிலிருந்து ஏற்படுகிறது.

## வாழ்க்கையின் முடிவு

காலப்போக்கில் அபின் ஹீரோயின் பாவிப்பவர்கள் வலியினால் தசைநார்களை நன்றாகப் பாவனையில ஈடுபடுத்தாததால், தசைநார்கள் வலுவிழந்து மெலிந்து காச நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் போன்று தோற்றமளிப்பார்கள்.

ஏ. செல்வரத்தினம்
(வைத்தியநிபுணர்)

---

## இன்று

மாதம்: ஆனி
திகதி: 1 (1986-06-15)
கிழமை: ஞாயிறு
திதி: அட்டமி
பி இ வரை
நக்ஷத்திரம்: பூரம் காலை 6.49 ன் மேல் உத்தரம்

---

# இவ்வாரம் எப்படி?

### மேடம்

எண்ணிய விடயத்தில்தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலை வாரிவிடக் கூடும். பணமுடை வேதனை தரும். மனத தளர்ச்சிக்கு இடங் கொடாதீர். நிதானம் வேண்டும்.

### இடபம்

உங்கள் நடவடிக்கைகளில் தனிச் சிறப்புத் தென்படும். பெரியவர் ஒருவர் உங்களுக்குக் கை கொடுத்து உதவுவார். குடும்பம் வளம் நிறைந்ததாகக் காணப்படும். பயன் தரும் பயணம் ஒன்றும் மேற் கொள்ளப்படலாம்.

### மிதுனம்

தொழில் துறையில் தொல்லைகள் தோன்றும் வெளியிடத்துத் தொடர்புகளும் பெருகும். கருத்து வேற்றுமைகள் மறைந்து நல்ல முடிவு ஏற்படும். கல்வித் துறையிலும் முன்னேற்றமுண்டு. திடீர்ப் பயணத்திற்கும் இடமுண்டு.

### கடகம்

நீண்ட நாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும். புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும். புத்திரர்களுடைய செல்வாக்கும் பெருகும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும். பூமியாலும் முன்னேற்றம் உண்டு.

### சிங்கம்

வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று. வெளியிடத்துப் பயணம் வேதனை தரலாம். பொருள் முடை தென்படும். கடன் படவும் நேரிடும். பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல் பொறுமையைப் பேணி நடக்கவும்.

### கன்னி

நம்பிக்கையின் மூலம் பணம் விரயமாகும். எதிர் பார்த்த விடயத்தில் சோர்வு தென்படும். சொந்தத் தொழில் புரிவோர் அதிக விழிப்புடன் இருக்கவும். சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம். ஓய்வு விடயத்தில் கவனம் வேண்டும்.

### துலாம்

இதயப் படுதாவில் இன்பக் கூத்து. வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும். தொழில் துறையில் புதிய வெற்றியும் கிடைக்கும். ஆரம்பத்தில் எதிர்த்தவர்கள் ஆதரவு கொடுப்பதற்கு முன் வருவார்கள்.

### விருச்சிகம்

உடல் நலம் சிறிது பாதிக்கப்படும் வைத்திய வழிகளில் பணம் செலவாகும். சகோதர வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு. எண்ணிய கருமத்தில் தடையேற்படும். ஓய்வு விரும்பத்தக்கது. இவ்வாரம் அமைதி வேண்டும்.

### தனுசு

மாதுருவழிப் பெருமை கிட்டும். மனம் போல் யாவும் நடக்கும். கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் உண்டு. இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும் சிலருக்குப் புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பமும் ஏற்படலாம்.

### மகரம்

சூழ்நிலையில் நல்ல மாறுதல்கள் தென்படும். அமைதியான வாழ்வுடன் தெய்வத்தின் அருளும் கிடைக்கும். தொழில் துறையிலும் பாராட்டுச் சேரும் புத்திரர்களால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

### கும்பம்

எதிர்பார்த்த விடயத்தில் ஏமாற்றம் தென்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். சிலருக்கு ஆயுத பீடைக்கும் இடமேற்படும். குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். எவ்விடயத்திலும் இவ்வாரம் பொறுமையைக் கடைப் பிடிப்பது நன்று.

### மீனம்

வாழ்க்கையில் தென்றல் வீசும். காதல்சிட்டுக்களுக்குச் சிறப்பான வாரம். கணவன் மனைவி உறவு இறுக்கமாக இருக்கும் குடும்பத்தில் குதூகலம் தென்படும். உறவினர்களின் ஆதரவும் பெற்றோரின் ஆசியும் கிட்டும்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

---

# வெட்டுக்குளத் தொளியே

சீர்பூத்துச் சைவநெறி செழிக்கும் அரியாலைப்
பேர்பூத்துப் பொங்கும் பெருநகரில் பார்பூக்கத்
தேனருவி சூழ்வளந் தேங்குவெட் டுக்குளமே
ஞானபுவ னேஸ்வரிக்கு நாடு.

அன்னை திருப்பாதம் அருள்வெட் டுக்குளத்தின்
இன்னல் அகற்றும் இருநிதியம்- அன்னே!
உய்யும் வகையருளி உன்றன் அடியாரை
எய்யாது காப்பாய் எழுந்து.

தா. தேவமதுரம்.

---

# வீடுகளில் கள் விற்பனை செய்வோருக்கு அபராதம்

'கூட்டுறவு புனருத்தாரணக் குழுவின் கட்டுப்பாட்டை மீறி, வீடுகளில் கள் விற்பனை செய்யும் உற்பத்தியாளர்கள், தெரியவரும் பட்சத்தில் ஒரு போத்தல் கள்ளுக்கு ஆகக்கூடுதல் 150 ரூபா குற்றப்பணம் அறவிடப்படுவதுடன் வீடுகளில் கள் அருந்தும் பாவனையாளர்கள் மீதும்கடும்நடவடிக்கை எடுக்கப்படும்.'' கள் உற்பத்தியாளர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் கூட்டுறவுபுனருத்தாரணக் குழுவினால் விடுக்கப்பட்டுள்ளஅறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

''சங்கத்தில் அனுமதி எடுத்தவர்களிடம் கள் பிடிபட்டால் கள்ளும் பாத்திரமும் பறிமுதல் செய்யப்படுவதுடன் போத்தலுக்கு 50 ரூபா குற்றம் விதிக்கப்படும். அனுமதி பெறாதவர்களிடம் கள் பிடிபட்டால் கள்ளும் பாத்திரமும் பறிமுதல் செய்யப்படுவதுடன் போத்தலுக்கு 100 ரூபா குற்றம் விதிக்கப்படும். தொழில் செய்யாத ஒருவர் வீட்டில் கள் பிடிபட்டால் கள்ளும் பாத்திரமும் பறிமுதல் செய்யப்படுவதுடன் கள் வைத்திருந்தவருக்கு போத்தலுக்கு 100 ரூபா குற்றமும், அவருக்கு கள் வழங்கியவருக்கு போத்தலுக்கு 150 ரூபா குற்றமும் விதிக்கப்படும்.

''பாவனையாளருடன்பிடிபடுமிடத்து மேற்கூறிய குற்றத்துடன் கடும் நடவடிக்கையும் எடுக்கப்படும் அனுமதி வழங்கிய மரங்களுக்கு இலக்கமிடப்பட வேண்டும். இலக்கமின்றி தொழில் செய்யும் மரங்களின்உற்பத்தி தடுக்கப்படும்.

''கள் உற்பத்தியாளர்கள் அனைவரும் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவராகச் சேரவேண்

[9ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பட்டினிச் சாவிலிருந்து

# மக்களைக் காப்பாற்ற மாற்று உணவு அவசியம்

மாற்றுடை இன்றியும் மனிதன் வாழலாம் மாற்றுணவு இன்றி வாழ்தல், மடிதலுக்குச் சமன். இக்கட்டான நிலையில் வாழும் தமிழினத்துக்கு இது சாலப் பொருத்தமானது. இந்தியா உணவு நெருக்கடியை நோக்கியபோது திங்கட்கிழமை தோறும் ''சோறு'' சாப்பிடாமையைக் காலம் சென்ற இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி கட்டாயப்படுத்தியிருந்தார். அதுவே 'சாஸ்திரி வாரம்'' எனப் பிரபல்யம் பெற்றது.

நெப்போலியனின் போர்கள் ஐரோப்பாவிலே நடைபெற்ற காலம். அவனது படைகளுக்குச் சீனி கிடைக்கவில்லை. மாற்றுணவுதேடி அலைந்த நெப்போலியனின் சார்பான விஞ்ஞானிகள் ''பீற்றூட்'' கிழங்கிலிருந்து சீனியைக் கண்டுபிடித்தனர். அதுபோன்று ஆபத்து மிகுந்த கால கட்டத்தில் வாழும் எமக்கு ''மூக்கைப்பிடித்தால் வாயைத் திறக்கவல்ல'' மதிநுட்பமாவது தேவை. பெரும்பான்மைச் சமூகமே இடுப்புப்பட்டியை இறுக்கச் சொல்கின்றார் நிதி அமைச்சர் ரொனி. தமிழர் விசயத்தில் இதை நாம் இரட்டிப்பு அவதானமாகக் கொள்ளல்வேண்டும்.

இன்று 'தென்திசை'யை நாம் நோக்கிப் பார்ப்பது வீணான பொருளாதார அழிவினையே தரவல்லது. நாம் எம்மைப் பாதுகாக்கவேண்டும் என்ற நிலையை அறிஞர்கள் இன்று அல்ல பல ஆண்டுகளாக வற்புறுத்திவருகின்றார்கள். அதிலே அக்கறை எடுக்காத தமிழ் மக்கள் இனியாவது அக்கறை எடுக்கக் கடவர்!

2வது உலக மகா யுத்தத்திலே திருகோணமலையில் இரண்டொரு இடங்களிலே குண்டு விழுந்தது உண்டு.

**திக்கபக்தன்**

ஆனால் சுதந்திரம் அடைந்த 37 ஆண்டுகளில் தமிழ்ப் பிரதேசங்கள் எங்குமே போர் விமானங்கள் குண்டு மழை பொழிகின்றன. ஓடினால் ''ஷெல்'' ஓடோட விரட்டும், நின்றால் 'ஹெலி' அடிக்கும், பதுங்கு குழிக்குள் இறங்காவிட்டால் புதை குழிக்குள் இறங்கவேண்டியநிலை எமக்கு வந்துள்ளது. இந்நிலையில் டசிக்கும் மக்களுக்கு வெறும் சோற்றுணவுக் கனவு வெறும் பகற்கனவாகவே முடியும். எனவே எமது மக்சள் தம்மைத்தாமே காப்பாற்ற மாற்றுணவுத் திட்டம் மிக அவசரமானது.

செல்வமாக வளர்ந்த சீமான் வீட்டுப் பிள்ளைகள் சிலர் அகதிகளாக யாழ்ப்பாணம் நோக்கி வந்தனர். சொகுசாக வாழ்ந்த அவர்கட்கு அகதியாக ஓடிவரும்போது மாற்றுணவாகத் தேங்காய்ச் சொட்டே கிடைத்தது. ஆனால் அவர்களின் உடல்நிலை அதனை ஏற்றுக்கொள்ளாமையால் அவர்கள் தமது உயிரை இழக்கவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டது நம்புங்கள்; நடந்ததுதான்!

எம்மை ஆதரித்து வந்த மடாலயங்களும் எரிந்துவிட்டன. நாம் எம்மை நாமே காப்பாற்றும் வல்லமையை அடையவேண்டும்.

அதிக ஆண்டுகளாக நாம், பனை தரும் வளங்களை அழித்துவிட்டோம். இனியாவது அவற்றை அழியாது அதிலிருந்து கிடைக்கக் கூடிய உணவுகளைச் சேமித்தே ஆகவேண்டும். பனையில் இருந்து பயன்பெற்று பனாட்டு தயாரிக்கக்கூடிய காலம் நெருங்கி வருகின்றது. இதனை உதாசீனம் செய்யாது அவற்றை ஒவ்வொரு குடும்பமும் பாதுகாக்கலாம். கோதுமை மா எமக்கு நினைத்த நேரத்தில் கிடைக்குமோ என்பது சந்தேகமானது. எனவே குரக்கன், வரகு, எள்ளு என்பனவற்றை நாம் பயிரிடவேண்டும். மண்ணெண்ணெய் தட்டுப்பாடான இக்காலத்திலே பழைய துலாக்களை மீண்டும் நாம் புதுப்பிக்கவேண்டும், கிடைக்கக் கூடிய மின் சாரத்தை லாவகமாகப் பயன்படுத்தவேண்டும். விவசாயத் திற« என்று நாம் இனிமேல் ''சீசன்'' பார்ப்பது எம்மை நாமே அழித்துக்கொள்வதாக முடியும். பனை வளங்களில் ஒன்றான ஒடியலும், புழுக்கொடியலும் எமது ஆபத்தான நேரத்திலே கைதந்து உதவக்கூடியன. தமிழ் மக்களின் சிந்தனை மாற்றுணவில் தொடரவேண்டும். ''காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே எனப் பாடினார் பட்டினத்தார். ஆயினும் உடுத்த உடையுடன் ஓடினாலும் தூக்கிக்கொண்டு ஓடக்கூடியது புழுக்கொடியல்! எல்லாம் வந்தபின்பு அணைகட்டுவோம் என்று இருக்கவேண்டாம். அதிலும் கொஞ்சமாவது வாங்கி வைப்போம்!

வருடக்கணக்காக வளர்ந்து பயன்தரும் மரங்கள் இப்போது வேண்டாம். 10 நாட்களிலே வளர்ந்து பயன்தரும் கீரை வகைகள் உண்டு. மூன்றரை மாதங்களில் பலன் தரும் மரவள்ளியுண்டு. நிலக்கடலை வர்க்கங்கள் உண்டு. அவற்றையும் நாம் பயன்படுத்தவேண்டும்.

தென் இலங்கையிலே கொண்டு சென்று சந்தைப் படுத்தமுடியாத நிலை புகையிலைக்கு உண்டு இரண்டு வருடங்களுக்கு முன்பு செய்த புகையிலையே பல விவசாயிகளின் வீடுகளில் இன்றும் உண்டு. ஆயினும் நாம் திருந்திவிட்டோமா? இல்லை இந்த வருடமும் புகையிலை உற்பத்தியே அதிகம்! சானல் நீரை நம்பியிராது புகையிலை வெட்டிய தோட்டங்களில் உடனடியாக மாற்றுணவுகளைப் பயிரிடுவோம்!

மாற்றுணவு தற்பாதுகாப்பு யுத்தத்தில் எமக்குக் கேடயங்களாகப் பயன்படும். முற்றத்தில் இருக்கும் முருங்கை மரங்களும், வாழைகளும் ஊரடங்கு நேரத்தில் எமக்கு எவ்வாறு பயன்பட்டன என்பதனைக் கருத்தில் கொண்டு நாம் சொல்லாதவற்றையும் தமிழ்மக்கள் தமது அகக்கண்ணால் அறிந்து பயன்படுத்திக் கொள்க!

கல்கத்தாவில் முன்பு ஒரு முறை பஞ்சம் ஏற்பட்டது. ஒரு குடும்பத் தலைவனுக்கு

(8ம் பக்கம் பார்க்க)

# ஆரம்பக் கல்வி ஒரு வரலாற்று நோக்கு

ஆரம்பக் கல்வியின் இன்றியமையாமை, இன்று பலதரப்பட்ட மக்களினாலும் உணரப்பட்டுவருகின்றது. நாட்டின் எல்லாக் குழந்தைகளும், எதுவித பாகுபாடுகளுமின்றிக் குறைந்தபட்சம் ஆரம்பக் கல்வியையேனும் பெற்றுக் கொள்ளவேண்டுமென்றநிலைப்பாடு உறுதி பெறறுவருகின்றது ஆரம்பக் கல்வியே, கல்வியெனும் முழுப்பொருளின் புகுமுகம் என்றும், அத்திவாரம் என்றும் கொள்ளப்படும் கருத்து யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன்புரி நிறுவனங்கள், அரசு, கல்வித்திணைக்களம் மற்றும் ஐக்கிய நாட்டு நிறுவனங்கள் போன்ற அனைத்துலக மட்டத்திலான அமைப்புக்கள் என்பன ஆரம்பக் கல்வி தொடர்பான விடயங்களில் கூடிய சிரத்தை காட்டுகின்றன. அனைத்துலக ஆரம்பக் கல்வித் தத்துவம் செயற்பாடாகிவருகின்றது. குழந்தைகள் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி அளிக்கப்படவேண்டும் என்பதே இத்தத்துவத்தின் தாற்பரியமாகும். இதனால் ஆரம்பக் கல்வியைப் பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையி முன்பு என்றும் இல்லாத அளவிற்குத் துரித முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய தொகை அடிப்படையிலான அதிகரிப்பைப் போலவே, ஆரம்பக் கல்வியின் குறிக்கோள், கலைத்திட்டம் கற்றல் - கற்பித்தல் முறைகள் என்பனவற்றை உள்ளடக்கிய தர அடிப்படையிலும் மாற்றங்களும், முன்னேற்றங்களும் புகுத்தப்பட்டுவருகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், ஆரம்பக் கல்வித் துறையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் அபிவிருத்திகள் என்பன அவ்வக்காலப் பகுதிகளில் நிலவிய சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனவாகவே இருந்து வந்துள்ளன. 1972ம் ஆண்டுவரை இத்தகைய ஓர் உறுதியற்ற நிலையே ஆரம்பக் கல்விமுறையில் தொடர்ந்து நீடித்தது.

1972—73ஆம் ஆண்டுகளில் முன்னோடிப் பாடசாலைகளில் பரீட்சார்த்தமாகவும், 1974ம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் சகல ஆரம்ப பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஆரம்பக் கல்வி முறை, ஆரம்பக் கல்வி வரலாற்றில் உறுதியான ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. ஒன்றிணைந்த கல்வி முறை என்றும் அழைக்கப்பட்ட இம்முறை, குழந்தை பூரண திருப்தியுடனும், விருப்பத்துடனும் கற்பதற்கும்; மகிழ்ச்சி நிறைந்த சூழலில் செயலாற்றுவதற்கும்; வளர்ந்தோர் ஆதிக்கத்தினின்றும் விடுபட்டுச் சுயமாகச் சிந்திப்பதற்கும், தனித்தன்மையை வளர்ப்பதற்கும் வழி செய்தது. குழந்தையை முதன்மையாகக்கொண்ட இக்கல்வி முறை, குழந்தை இயல்பாகவே தமக்கமைந்த செயலாற்றல் மூலமே கூடுதலாகக் கற்கவல்லது என்ற தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது.

**கு. சோமசுந்தரம்**

''புதியவற்றை ஆக்கக்கூடிய திறனையும், புதியவற்றைக் கண்டுபிடிக்கக்கூடிய ஆற்றலையும் கொண்ட மனிதர்களை உருவாக்குவதுதான் கல்வியின் பிரதான குறிக்கோளாகும்'' என்ற கல்வியியலாளர் ஜீன் பியாஜே என்பாரின் கருத்துக்கு இக்கல்விமுறையில் செயல் ரூபம் அளிக்கப்பட்டுள்ளது.

''எனக்காகத் தீர்மானங்களை நீங்கள் எடுப்பின்
என்றுமே தீர்மானங்களை எடுக்க
என்னால் முடியாமற் போகும்
நான் இன்னாராக வேண்டுமென நீங்கள்
தீர்மானிப்பின் நான் என்னையே
இழந்துவிடுவேன்.
நானாகச் சிந்திப்பதற்கு நீங்கள் இடமளிப்பின்
அதுவே நீங்கள் செய்யும் பேருதவியாகும்.''

இது ஆரம்பக் கல்வியில் அடியெடுத்து வைக்கும் குழந்தை, வளர்ந்தோர்களுக்கு விடுக்கும் வேண்டுகோள். குழந்தையின் அர்த்தமுள்ள இவ் வேண்டுகோளுக்கு இடமளித்த இப்புதிய ஆரம்பக் கல்வி முறையே இன்றும் பெறுமதிமிக்கதாக இலங்கையில்கொள்ளப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

# குண்டுத்தாக்குதலால் ஏற்படும் முறிவுகளுக்கு முதலுதவி

**கால்—கை**

காயத்தில் இருந்து இரத்தப் போக்கு அதிகமாக இருந்தால் இரத்தப் போக்கை முதலில் கட்டுப்படுத்த வேண்டும். இரத்தப்போக்கு கடுமையாக இல்லாத சந்தர்ப்பங்களில், சற்று நேரத்திற்குக் காயத்தில் இருந்து இரத்தம் வெளியேறினாலும் பரவாயில்லை. இது காயம் சுத்தமாவதற்கு உதவும்.

சோப்பும் கொதிக்க வைத்த நீர் கொண்டு காயத்தைக் கழுவி, சுத்தமான துணியினால் கட்டுப் போடுதல் வேண்டும். குண்டு பாய்ந்த துளையத் தோண்டாமல் இருப்பது பொதுவாக நல்லது.

கால் முறிவு ஏற்படின் நோயாளியைப் படுக்கையில் விடுதல் வேண்டும். கைமுறிவு ஏற்பட்டிருப்பின் சம நிலையில் கதிரையில் இருத்தல் வேண்டும்.

காயம் ஏற்பட்ட பகுதிகளில் தொற்றல் ஏற்படாத வண்ணம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

தொடை எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பின் நோயாளியைச் சமநிலையில் படுக்கச் செய்து அக்குளிலிருந்து பாதம் வரை மட்டை வைத்துக்கட்ட வேண்டும்.

**இளவாலை அ. கொலின்ஸ் டொனல்ட்**

முழங்காற்சில்லு முறிவு ஏற்படின், காலை உயர்த்தி வைத்து அதன் இடையில் தலையணைகளை அடுக்கிவிட வேண்டும்.

கையில் எலும்பு முறிவு ஏற்படின் அக்குளில் சும்மாடு வைத்துக் கட்டிவிடுதல் வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம் நோயாளின் துன்பநிலை கணிசமான அளவு குறைக்கப்படும். முறிவுகள் பெரிதாக இருக்கும்போது உடனடியாக வைத்திய சேவையை நாடுதல் நலம் தரும்,

**தலையில் குண்டுபாய்ந்தால் செய்யவேண்டிய முதலுதவி**

சுத்தமான கட்டுந்துணி கொண்டு காயத்தைக் கட்ட வேண்டும்.

காயப்பட்டவரைப் பாதி உட்கார்ந்த நிலையில் வைக்க வேண்டும்.

நோயுயிர்முறி கொடுக்க வேண்டும் [பெனிசிலின்]

மருத்துவ உதவியை நாட வேண்டும்.

**வயிற்றில் குண்டுபாய்ந்தால் வழங்கவேண்டிய முதலுதவி**

சுத்தமான கட்டுந்துணி கொண்டு காயத்தைக் கட்டவும்.

குடல் வெளியே வந்திருந்தால் உப்புக்கலந்த கொதிநீரில் நனைத்து சுத்தமான துணியால் மூடவும். [இளஞ்சூடு நீராகும்]

குடலினை உள்ளே தள்ள முயற்சித்தல்கூடாது

வாய் வழியாக எதையும் கொடுக்கக்கூடாது. (உ+ம்) தாகமாக இருந்தால் ஈரத் துணியைச் சப்பக் கொடுக்கவும்.

வயிற்றைக் கிழித்துக் கொண்டு இரப்பை அல்லது குடல்வரை செல்லுகின்ற காயம் ஆபத்தானது. உடல் வைத்திய சேவையை நாட வேண்டும்.

## திங்கள் வந்தாள்

திங்கள் வந்தாள்
செவ்வாய்த் திறந்து
புதன் வருவேன்
என்று புறப்பட்டாள்;
வியாழன் வரக்
காத்திருந்தேன்.
வெள்ளி முளைத்தது
சனியன் சொன்னான்
''சங்கதி தெரியுமா?
ஞாயிறு முகூர்த்தம்
நானே கணவன்''
என்றவன் கூறலும்
என்தலை சுற்றுதே!

—பன்னீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகளே, ஓ பறவைகளே . . .

# கடவுச் சீட்டில்லாத சுதந்திரப்பயணிகள்

[கடந்தவாரத் தொடர்ச்சி]

மன்னாரில் பரந்துகிடக்கும் தரவைக்கடலும், சதுப்பு நிலங்களும் வயல்வரப்புக்களும் இவற்றுக்குப்பிடிக்கும். சங்குப்பிட்டி, கேரதீவுத் தரவைக் கடலும், ஆனையிறவு உப்பு ஏரியும், நாவற்குழியில்இருந்து சந்திவரை பரந்துகிடக்கும் உவர்நீர் நிலைகளும் இவற்றின் தற்காலிக தங்குமிடமாகும்.

இங்கிருந்து முல்லைத்தீவிலுள்ள நாயாறு, கொக்கிளாய் பகுதிகளில் உள்ள முகத்துவாரங்கட்குச் சென்று தங்கிப் பின் திருமலையின் குச்சவெளி, நிலாவெளி, மூதூர்ப் பகுதிகளிலுள்ள கரைச்சிகட்கும், மகாவலியின் கழிமுகங்களிலும் இரைதேடிப் பெற நிற்கின்றன. அதன் பின் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலுமுள்ள சதுப்பு நிலங்களையடைந்து அப்படியே அம்பாறை மாவட்டத்தின் உல்லை, ஊறணி போன்ற இடங்களூடாக ஈற்றில் கூமுனையை அடைகின்றன.

### பறவைகளை அடையாளமிடல்

பல ஆயிரக்கணக்கான மைல் தொலைவில் இருந்து இப்பட்சிகள் இங்கு வருகின்றன என்பது வியப்புக்குரியதே. இவை எங்கு, எப்போது, எவ்வாறு குடிபெயர்ந்து செல்கின்றன என்பது பற்றிப் பறவையியலாளர்கள் நீண்டகாலமாகவே ஆராய்ந்து வருகின்றனர். புராதன காலந்தொட்டே பறவைகள் இடம்பெயர்வது கவனிக்கப்பட்டு வந்துள்ளது. இதை விஞ்ஞான பூர்வமாக நிரூபிப்பதற்காக, அவற்றை அடையாளமிடும் முறையை விஞ்ஞானிகள் மேற்கொள்கின்றனர். உரிய பறவைகளைப் பிடித்து அவற்றின் கால்களில் உலோகத்தகடுகளாலான ''மெட்டி'' களைப் போட்டுவிடுவர். இம்மெட்டிகளில் காலம், இடம் போன்ற முக்கிய தகவல்கள் பதிக்கப்பட்டிருக்கும். இப்படியாக கால்களில் போட்ட மெட்டிகளுடன் காலத்துக்குக் காலம் குடிபெயரும் பறவைகள், பல்வேறு நாட்டிலுள்ள விஞ்ஞானிகளால் ஆராயப்பட்டு, அத்தகவல்கள் நாடுகட்கிடையில் பரிமாறப்பட்டுத் தொகுத்து ஆராயப்படும். இடம்பெயர்ந்த புள்ளினங்கள் கூட்டம் கூட்டமாயுள்ளபோது அதிசக்தி வாய்ந்த தொலைநோக்கியால் அவற்றின் கால் மெட்டிகள் அவதானிக்கப்பட்டுத் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. இதனுல் இவற்றின் இடப்பெயர்ச்சி பற்றிய பல அபூர்வத் தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### குடிபெயர்தல்

பறவைகள் குடிபெயரும் போது ஆயிரக்கணக்கில் கூட்டங் கூட்டமாகவே செல்லும். இவை எவ்வாறு கண்டம் விட்டுக் கண்டம் செல்கின்றன என்பதோ, மீண்டும் தமது சொந்த இடங்கட்கு எப்படி இவை அச்சொட்டாக மீள்கின்றன என்பதோ இன்றும் ஆராய்ச்சிக்குரிய விடயமாகவேயுள்ளது. எனினும் இவை சூரிய, சந்திரனையும் இதர கோள்களையும், விண்மீன்களையுமே தமது வான்வழிகாட்டிகளாக, திசையறி கருவிகளாகக்கொண்டே பறக்கின்றனவென்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

இவை இடம்பெயரும்போது ஏற்படும் வான் நெருக்குதலால் ஆகாய விமானங்கள் விபத்துக்குள்ளாகின்றன. ஜெட் விமானங்கள் பறக்கும் போது, மிகவேகமாக பிரமாண்டமான அளவில் காற்றை உறிஞ்சும் தன்மையன. பறவைக் கூட்டங்கள் விமானப் பாதையில் தென்படும்போது, அவை ஜெட் இயந்திரங்களால் வளியுடன் சேர்த்து உறிஞ்சப்பட்டு இயந்திரக் கோளாறுகள் ஏற்படுகின்றன. எனவே விமானிகள் பறவை இடப்பெயர்ச்சிக்

“ஸ்மிருதி”

காலங்களில் தம்பாதையில் மிக்க அவதானமாயிருப்பர்.

நாரைகள் எப்போதும் கூட்டமாகப் பறந்தாலும் 'ஈட்டிமுனை'' வடிவத்திலேயே பறப்பன. நடுவில் ஒன்று பறக்க அதன் இருமருங்கிலும் ஒழுங்கான இடைவெளியில் சிறிது பின்தள்ளி ''ஈட்டிமுனை'' ஒத்த வடிவத்தில் இவை வானில் பறந்து செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும். இவை பறக்கும்போது தமது தலையையும், கழுத்தையும், அலகையும் நேராக நீட்டி, கால்களை அதற்கெதிராக பின்னே நீட்டியபடி; சீரான சிறகடிப்புகளை மேற்கொண்டு அம்புபோல் விர்ரென விரைந்து இப்படியே இவை பறக்கும் கண்டங்களையும் சமுத்திரங்களையும் கடந்து தமது இலக்கை அடைகின்றன. சில வகை அன்னங்களும், வாத்துக்களும், தாராக்களும் பறக்கும்போது நூல்பிடித்த நிரையில் நேர்சாய்வாக சிறகுகளை வேகமாக அடிப்பதும், பின் ஓய்வெடுப்பதுமான பாங்கில் பறப்பன.

தென் அமெரிக்கா; யூரேசியா, ஐரோப்பாவைச் சேர்ந்த ''செந்நாரை''யெனப்படும் நீர்நாரை, குளிர்காலத்தில் வெதுவெதுப்பான ஆபிரிக்கா மத்திய கிழக்கு நாடுகள், சீனு, இந்தியா, இலங்கைக்கு வருகின்றன உலகின் மிக அழகான நாரை இனங்களில் இதுவுமொன்று. இவை நீர்நிலைகளில் நின்று நீண்ட கழுத்தை நீட்டி இரைதேடுவது; பாரம் தூக்கிகள் நின்று செயற்படுவது போலிருக்கும். மிக நீண்ட கால்களையும், கழுத்தையும், அலகையுமுடையன. இவ்வாண்டு தை, மாசி மாதங்களில்; கேரதீவு, சங்குப்பிட்டி, மன்னார்க்குடாவையண்டிய நீர்நிலைகளில் அதிக அளவில் காணப்பட்டன.

ஐரோப்பாவைச் சேர்ந்த ''கரண்டி மூக்கன்'' எனப்படும் நாரை; குளிர்காலத்தில் வெப்பமான ஆபிரிக்கக் கரைகளை நாடிச்செல்லும். இவற்றின் மூக்கு தலையில் ஒடுங்கி நுனியில் கரண்டிபோல் அகன்றிருக்கும். துருவத்தைச் சேர்ந்த ''துருவ'' அன்னங்களும், வாத்துக்களும், தாராக்களும் குளிர்காலத்தில் ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகட்கும், ஜப்பானுக்கும் சென்று பின் இனவிருத்திக்காகத் துருவத்துக்கு வருகின்றன.

கனடா, சைபீரியா, போன்ற தேசங்களைச் சேர்ந்த ''கனடா வாத்து''க்கள் குளிர்காலம் ஆரம்பமானதும் குடிபெயர்ந்து அத்திலாந்திக், பசுபிக்கரையோரத்திலுள்ள உவர் நீர்நிலைகளை நாடிச்செல்லும்.

''கறுப்புப்பட்டி வாத்து'' எனப்படும் வாத்துக்கள் மத்திய ஆசியாவைச் சார்ந்தவை. குளிர்காலத்தில் இடம்பெயர்ந்து உல்லாசமாக, சூடான், வடஆபிரிக்கா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் வந்து தங்குகின்றன.

''கானெட்ஸ்'' புட்கள் காலநிலை மாறத் தொடங்கியதும் வேர்ஜீனியாவில் இருந்து மெக்ஸிக்கோவுக்கும், பிரிட்டனில் இருந்து கனறிக் தீவுகட்கும், ஆபிரிக்காவுக்கும் செல்கின்றன. இவை ஒரே மூச்சில் சுமார் நாலாயிரம் மைல் தொலைவைக் கடந்து தம் வேனிற்கால இடங்களையடைகின்றன.

''வெண்நாரை''கள் பெரிய அளவில் குடிபெயர்ந்து ஐரோப்பாவில் இருந்து குளிர்காலத்தில் ஆபிரிக்காவுக்குச் செல்வது பண்டைக்காலத்தில் இருந்தே அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆசியாவின் சீனு, ஜப்பானுக்கும் செல்லும் இவை தாம் செல்லும் இடங்களிலுள்ள வீட்டின் கூரைகளில் கூடுகட்டும் இவை தம்வீட்டுக் கூரைகளில் கூடுகட்டுவது அதிர்ஷ்டமென எண்ணும் மக்கள், கூடைகளையும், பெட்டிகளையும் கூடுகளை அமைக்க வசதியாகப்போட்டு வைப்பர். இதில் முக்கியம் யாதெனில் அதே பறவை அதேவீட்டுக் கூரைக்கு மீண்டும் மீண்டும் வருவதேயாகும்.

நாரைகள் பல்லாண்டு வாழ்வன. வாஷிங்டன் மிருகக்காட்சிசாலையில் 55 வயதுவரை நாரையொன்று வாழ்ந்துள்ளது. ஜப்பானியரின் நீடிய ஆயுளின் சின்னம் நாரையாகும். அவர்களின் மணவிழாக்களிலும் பிறந்த நாள் விழாக்களிலும் நாரையும், ஆமையும் மங்கலச் சின்னங்களாக இடம்பெறும்.

இவை பெரும்பாலும் நீர்நிலைகளையண்டியே வாழ்கின்றன. சிறு மீன்கள், தவளைகள், புழுக்கள் பூச்சிகள், தாவர முளைகள், வேர்கள், விதைகள், நண்டு, நத்தையென்பன இவற்றின் உணவாகும். பறவைகள் எவ்வாறு தம் உணவைப் பெறுகின்றன எனும் அடிப்படையிலேயே அவற்றின் அலகுகள் அமைந்திருக்கும்.

எனினும் எம்மில் எத்தனை பேருக்கு நமது பிரதேசத்திலுள்ள இயற்கை வனவிலங்குகள் பற்றியும், அவை வாழும் சரணலயங்கள் பற்றியும் தெரிந்துள்ளது? வடக்கு கிழக்குப் பிரதேசமெங்கணும் பரந்து கிடக்கும் காடு, வனம், மலை, ஆறு, குளம், கடல் போன்ற இயற்கை அளித்துள்ள வழங்களை யாரறிவர்? அவற்றின் முக்கியத்துவங்களையும், பயன்பாடுகளையும் நாம் எப்போதறிந்துகொள்ளப் போகின்றோம்?

## அயராது உழைத்திடுவோம்

ஆனமட்டும் பயன்படுத்தி அழகான தொழிலாற்றி
அனைவர்க்கும் வழிகாட்டி அயராதுழைத்திடுவோம்
போனகதை புதியகதை ஒன்றும் வேண்டோம்
பொருத்தமுள இக்கணமே எமக்குச் சொந்தம்
வானமெலாம் எண்ணத்தை வளரவிட்டே
வறட்டுநிலை பேசுவதா லென்னவாகும்
செயற்றிறனுல் சாதனையால் கடுமுழைப்பால்
செகமெலாம் முன்னேறக் கண்டும் நாங்கள்
செயலற்று வீணுக இருத்தல் இன்றி
சேவையிலே திறமையுடன் இறங்கி நின்றே
முயற்சிபல செய்துழைத்தே முன்னேற்றத்தால்
அயற்சியின்றி அனுதினமும் பாடுபட்டால்
அழகுமிகு நம்வாழ்வு ஒலிக்குமன்றோ?

—முருகவே பரமநாதன்

★ ஒரு நோக்கு

# கோகிலா மகேந்திரனின் ‘துயிலும் ஒருநாள் கலையும்’

கோகிலா மகேந்திரன் அவர்களின் முதல் நாவல் ‘துயிலும் ஒருநாள் கலையும்’ ஆசிரியர் பற்றி அறிமுகம் தேவைஇல்லை. அவர்பற்றி அறியாதவர் இலர். சமூக நாவல் பற்றி ஆய்வு செய்யும்போது சமூகத்தைப் பற்றிச் சில வரிகள் தேவை. யாழ்ப்பாணச் சமுதாயம் ஒரு தனி ரகம். சைக்கிள்என்றுல் றலி, தையல் மெஷின் என்றுல் சிங்கர், கார் என்றுல் ஒஸ்டின், மாப்பிள்ளை என்றுல் வெளிநாட்டு மாப்பிள்ளை, நாவல்கள் என்றுல் அது மு. வ, லக்ஷ்மி, மணிவண்ணன், அகிலன் போன்ற தென்னிந்திய எழுத்தாளர்கள்! இப்படி, வெளிநாட்டு மோகங்கள் என்ற மேகங்கள் சூழ்ந்த சமுதாயம். மற்றைய விடங்களில் உள்ளூர் உற்பத்திகள் சிறந்தனவோ என்னவோ தெரியாது; ஆனுல் நாவல் உலகில் கோகிலா மகேந்திரனின் ‘துயிலும் ஒரு நாள் கலையும்’ என்ற நாவல் வெளிநாட்டு மேகங்களைக் கலைத்துவிட்டது என்று துணிந்து கூறுவேன். இதன் நடை, கதையின் போக்கு, தத்துவங்கள், உளநூல் உணர்வுகள். விஞ்ஞான ஊசி ஏற்றல் போன்ற விடயங்கள் எல்லாம் அபாரம்!

நாவலின் ஆரம்பத்திலேயே பாலசிங்கம், பூரணி, குடும்பம் மனங்கசந்தநிலையில் நிற்கிறது. எங்கள் பண்பாட்டுப் பொக்கிஷங்களான புராணம், இதிகாசங்களில் பெரும்பாலும் பெண்கள் நுகர் பொருளாகவும், ஆணின் உடைமைப் பொருளாகவும் தான் வருகின்றனர். அது மட்டும் அல்ல கருவிகளாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறுர்கள். முனிவர்களின் தவத்தைக் கலைக்க, அசுரரின் தவத்தைக் கலைக்க பெண்கள் படைக்கலங்களாக உபயோகப்பட்டிருக்கிறுர்கள். இப்படியான சமூக அமைப்பில் இருந்து பெண்ணடிமைத்தனத்தை மீட்கப் பாடுபடுகிறுள் பூரணி.

கணவன் மனைவியிடையே கசப்புணர்வுக்குக் காரணம் அரசாங்க உத்தியோகம் அந்த நாளில் கணவன் மனைவி இருவரும் சேர்ந்துதான். தோட்டம், துரவு, இரும்பு வேலை, மரவேலை எந்த வேலையென்றுலும் செய்தனர். தொழில் வீட்டிற்றுன் களைப்படைந்த கணவனை மனைவி அடிக்கடி உபசரிப்பாள். மனம் மகிழ்வார் இருவரும். ஆனுல் இன்றோ எட்டு மணி வேலை, ஒருவரை ஒருவர் பார்ப்பதில்லை இருவரும் வேலைசெய்வதென்றுல் சொல்லவே தேவையில்லை.

வேலைக்குப் புறப்படும்போது அவசரம். ஒருவரை ஒருவர் நெருக்கமாக நினைக்கவே முடிவதில்லை. திரும்பிவரும்போது இருவரும் களைப்படைந்து வருகின்றனர். எனவே அப்போதும் நெருக்கமேற்பட இடமில்லை. இந்தநிலைதான் நாவலில்வரும் பாலசிங்கத்திற்கும் பூரணிக்கும். அத்துடன் பாலசிங்கத்தின் தாழ்வுச் சிக்கல்! இது மட்டுந்தான் காரணமென்று கூறமுடியாது. ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள அவர்கள் இருவருக்கும் நேரமில்லை. வேலைசெய்யும் பெண்களின் நிலையைப் பாலசிங்கம் போன்றவர்களால் உணரவே முடியாது. காரணம் அவர் ‘பிஸ்னெஸ்’காரர் நேரக் கட்டுப்பாடு இல்லை. ஆனுல் பூரணிக்கோ நேரக் கட்டுப்பாடு இதனுலும் சில சிக்கல்கள் ஏற்பட்டிருக்கலாம். இவை பாலசிங்கத்தின் தாழ்வுச் சிக்கலால் உருப்பெருப்பிக்கப்பட்டு இந்த நிலை வந்திருக்கலாம்.

பூரணி பெண்ணடிமைத் தனத்தை மட்டும் மீட்கப் புறப்படவில்லை. சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும் ஒரே நேரத்தில் உடைக்கப்புறப்படுகிறுள். பூரணியின் ஒரு தத்துவார்த்தமான கூற்று மிகமிக அருமை. ''பேசாமல் இருப்பவன்தான் மிகப்பெரிய பேச்சாளன்'' என்பது. ஆங்கிலப் பழமொழி ஒன்றுகூட இப்படிக் கூறுகிறது.

''Silence is some times more eloquent than words''

பூரணி தத்துவம் மாத்திரம் பேசவில்லை. பல சந்தர்ப்பங்களில் அதன்படி நடந்து பல கட்டங்களை வெற்றிகரமாகச் சமாளித்திருக்கிறுள். திறமை மிக்க பெண்தான்! கடமையைச் சரிவரச் செய்யும் ஆசிரியருக்கு ஏனையோரின் சொல்லெறி அதிகம், இது அருமையான அவதானம்.

பூரணியைச் சுற்றிச் சுற்றி வரும் இந்திரன் மாஸ்டர் ஆரம்பத்தில் கொஞ்சம் வரம்பு மீறியவர்போல் காணப்பட்டாலும் இறுதியில் அவர் ஒரு இலட்சியவாதியே ஒழிய வேறில்லை என்பது நாவலில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. இது அவலை மெல்பவர்களுக்கு இறுதியில் கல் கடிபட்டது போன்ற அருமையான அடி.

உதங்கா

பாலசிங்கம்குடிப்பவர் அல்ல. கூத்தடிப்பவரும் அல்ல. மிகவும் ஆழமானவர். ஆனுல் கண்ணிவெடி போல் அடிக்கடி வைக்கும் சொல்லலங்காரங்கள் பூரணியின் பூவுடலில் உள்ள உயர்ந்த உள்ளத்தைத் தகர்த்ததில் வியப்பொன்றும் இல்லை. இறுதியில் அவர் வைத்த சிலிண்டர் வெடியினுற்றுன் பூரணி பிரிந்து போவதை மீள் பரிசோதனை செய்வதைக் கைவிட்டாள், இதைத்தவிர அவளால் வேறு எதுவும் செய்யமுடியாது.

ஊரில் அவர் இருக்கும் போது பூரணி எப்பாத்திரத்திலேனும் இந்திரன் மாஸ்டருடன் நடிப்பதற்குச் சம்மதித்திருக்கக்கூடாது. கனவில் அவளின் அலறலும் அவளது பலவீனத்தையே சுட்டுகிறது. நடிப்பதில் தவறெதுவும் இல்லை. ஆனுல் எடுத்த எடுப்பிலேயே சுதந்திரத்தைப் பெற்றுவிடமுடியாது இது விஷப் பரீட்சை. எழுத்தாளர் லக்ஷ்மியின் ''புரட்சி ஒரு பெண்ணுக்குத் தேவைதான். ஆனுல் அவளது வாழ்வை அழிக்கக்கூடியதாக அது இருக்கக்கூடாது'' என்பதை ஞாபகப்படுத்தி இருந்தால் நன்றுகஇருந்திருக்கும். சுதந்திரப் போரில் பூரணி வெற்றி பெற்றுவிட்டாலும் உன்னத யுத்தங்களால் அவள் சுதந்திரவாழ்வு சிறந்ததாக அமையமுடியாது. ஆனுலும் உறுதியான உள்ளம் படைத்த பூரணி இவற்றையெல்லாம் உடைத்தெறிவாள் என்ற உணர்வை ஆசிரியர் ஊட்டியுள்ளது நாவலின் சிறப்பம்சம்.

இனிப் பொதுவான பாத்திரங்களை எடுத்தால் நான் மிக

( 8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் நவீனம்

# இருள் இரவில் அல்ல

✶ இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

## 13

அரசடியில் வெகுநேரமாக இருந்து யோசனை செய்த கந்தையர் பொழுது நன்ருகப் போன பின்னர்தான் அந்த இடத்தைவிட்டு எழுந்து வீட்டை நோக்கி நடந்தார்.

அங்கு வழக்கமாகக் கதிரைகள் பின்னும் ரவுண் கடையைச் சோந்த முகம்மது வந்திருந்து பிரிந்துபோய் இருந்த சில கதிரைகளைப் பின்னிக் கொண்டிருந்தார்.

கந்தையருக்குக் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டது. அவர் படுக்கும் சாய்மனைக் கதிரையும் கட்டாயம் பின்னப்படும் என நினைத்தார்.

அதனுல் விருந்தைப் பக்கம் போகாமல் சுருட்டுக் கொட்டிலுக்குப் போய் அந்தக் கொட்டிலின் திண்ணையில் அமர்ந்தார்.

''என்ன பாருங்கோ தங்கலட்சுமி வந்து கூட்டிக் கொண்டு போனமாதிரி இருந்தது. என்ன விசயம்'' என்று சுருட்டு சுருட்டிக்கொண்டிருந்த ஒருவர் கேட்டார்,

''விசேடமாக ஒன்றுமில்லை. சும்மா கதைக்கக் கூப்பிட்டா'' என்று கந்தையர் பதில் சொன்னுர்.

''தங்கலட்சுமி காரணமில்லாமல் வரமாட்டாவே.''

''இல்லைத் தம்பி விசேசமாக இல்லை ''

''அப்பு எதையோ மறைக்கின்றீர்கள். உள்ளதைச் சொல்லுங்கோ''

''நான் என்னத்தை மறைக்கிறது'' என்று கந்தையர் சொன்னுலும் அவருடைய மனமோ முகம்மது தன்னுடைய சாய்மனைக் கதிரையைப் பின்னுகின்ருரா? என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டிருந்தது. அதனுல் அடிக்கடி விருந்தைப் பக்கம் பார்த்துக்கொண்டிருந்தார்.

சுருட்டுக் கொட்டிலில் இருந்தவர்கள் கந்தையரை விடுவதாக இல்லை. தங்கலட்சுமியுடன் அவர் என்ன கதைத்தார் என்பதை அறிவதில் அதிக ஆர்வம் காட்டினர்கள். ''அப்பு கொண்டுபோய் விட்ட வசந்த மலரைப் பற்றிக் கதைத்திருப்பார் அப்பிடித்தானே'' என்ருர் ஒருவர்.

''ஓமோம் அப்பிடியும் இருக்கும். தங்கலட்சுமியின் பெட்டைகளின் கூத்துகளுக்கு வசந்தமலர் இடைஞ்சலாக இருக்கிருள் போல கிடக்கு'' என்ருர் இன்னுமொருவர்.

கந்தையர் அப்போதும் எதுவுமே கூறவில்லை. ''அப்பு மெளனம் சாதிப்பதில் இருந்து அதுதான் விசயம் போல'' என்று இன்னெருவர் கூறினுர்.

கந்தையர் விருந்தைப் பக்கம் பார்த்தபோது முகம்மது கதிரைகள் பின்னுவதை முடித்துக்கொண்டுவிட்டதைக் கண்டார்.

அதனுல்

சுருட்டுக் கொட்டிலைவிட்டு எழுந்து விருந்தைக்குச் சென்ருர்.

''தம்பி முகம்மது அந்தச் சாய்மனைக் கதிரையையும் ஒருக்கா பின்னும்'' என்று மு..மதுவிடம் சொல்ல.

''அதுக்கென்ன அப்பு ஆனுல் அவையள் இதுபற்றி ஒன்றும் சொல்லவில்லை'? என்று சொன்னுர்.

''சொல்ல மறந்து போயிருப்பினம். அதால பரவாயில்லை சாய்மனைக் கதிரையைப் பின்னும்'' என்று கந்தையர் சொல்ல அரைமனத்துடன் முகம்மது கதிரையைப் பின்ன ஆரம்பிப்பதற்காகப் பழைய பின்னல்களை வெட்டத் தொடங்கினுர்.

கந்தையருக்குப் பெரிய சந்தோஷமாக இருந்தது. அதனுல் விருந்தையில் ஒரு மூலையில் போய் அமர்ந்தார்.

முகம்மது பழைய பின்னலை அறுத்து முடிந்தபோது அங்கு புவனசுந்தரி வந்தாள். முகம்மது சாய்மனைக் கதிரையைத் துப்புரவு செய்து கொண்டிருப்பதை அவள் கண்டதும் அவளது முகம் கோபத்தால் சிவந்தது.

''என்ன முகம்மது யார் சொன்னது உதைப் பின்னச் சொல்லி''

முகம்மது மிரண்டு போனுர்.

''அப்பு தான் சொன்னுர்'' என்று பதற்றத்துடன் அவர் பதில் சொன்னுர்.

''அப்பு பின்னச் சொன்னுல் பின்னுறதே அவருக்கென்ன சொல்லுவர். காசு யார் கொடுக்கிறது இஞ்சை என்ன காசை மரத்திலேயே பிடுங்கிறது'' என்று பேசினுள். அப்படிப் பேசும்போது மூலையில் தலையைக் குனிந்துகொண்டிருந்த கந்தையரைப் பார்த்தாள்.

''முகம்மது! அதைக் கிடந்த இடத்திலேயே வைத்துவிடும். அந்தக் கதிரையைப் பின்ன வேண்டாம்'' என்று சொல்லி முன்னர் பின்னி முடித்த கதிரைகளுக்குக் காசைக் கொடுத்து முகம்மதுவை அனுப்பினுள் அவள்.

''யோசினையில்லாமல் எல்லாம் இருக்குதுகள், வயது போனுல் மூளையும் போயிடுமே. சாய்மனைக் கதிரையில்லாமல்இருக்கேலாதே ''என்று கந்தையரைப் பார்த்துப்பேசிவிட்டு உள்ளே போனுள் புவனசுந்தரி.

கந்தையர் குனிந்த தலையை நிமிர்த்தாமல் மருமகள் பேசுவதைக் கேட்டார். புவனசுந்தரி உள்ளே போனபின்னர்தான் மெல்லத் தலையை நிமிர்த்திப்பார்த்தார்.

விருந்தை பூராவும் பின்னப்பட்ட பலவிதமான கதிரைகள் காணப்பட்டன. அந்தக் காலத்தில் அவர் ஆசையில் தேவைக்கதிகமாகவே கதிரைகளை வாங்கிப்போட்டு அழகு பார்த்தார். ஆனுல் இப்போது எதுவுமே அவருக்குக் கை கொடுக்கவில்லை. பின்னப்பட்டு இருந்த கதிரைகளில் அநேகமானவை இவ்வளவு நாட்களும் பாவனைக்கு இல்லாமல் எங்கேயோ கிடந்தவை. அவை அவ்வளவு அத்தியாவசியமானவையாகவும் இருக்கவில்லை.

ஆனுல்

அப்படியான கதிரைகள் பின்னுவதற்குக் காசு இருக்கின்றது. தன்னுடைய சாய்மனைக் கதிரை பின்னுவதற்குக் காசு இல்லாமற் போய்விட்டதோ? என்ன மாதிரித் தங்கள் வெறுப்பைக் காட்டுகின்ருர்கள்.

என்ன வாழ்க்கையடா இது. இவ்வளவு பாவம் செய்தா பிறந்தோம். என்று அவர் சலித்துக்கொண்டார். அந்த விருந்தையில் இருப்பது அவருக்கு நெருப்பில் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

அதனுல் அந்த விருந்தையை விட்டு எழுந்து வெளியே வந்து என்ன செய்வது என்று யோசனை செய்யாமல் மனம்போனபோக்கின்படி நடந்து முருகன் கோயிலடிக்கு வந்தார். கோயிலின் முன்னுல் இருந்து இலுப்பை மரத்திஞல் அக்கோயிலடியில் குளிர்மையான காற்று வீசிக் கொண்டிருந்தது. அந்த வெம்மையான வேளையிலும் அந்தப் பகுதி இனிமையாக இருந்தது.

கந்தையர் அந்த இனிமையை அனுபவித்துக் கொண்டு கோயிலின் முன் மண்டபத்தில் மெதுவாகச் சாய்ந்து படுத்தார். மத்தியானப் பொழுது கழிந்துவிட்டாலும் அவர் இன்னும் தனது மத்தியானச் சாப்பாட்டை முடித்துக்கொள்ளவில்லை.

அதனுல் உண்டான களைப்பினுலும் அந்த மண்டபத்தில் வீசிய சுகந்தமான காற்றினுலும் சற்று நேரத்துக்கெல்லாம் அவர் மெய்மறந்து தூங்கிப்போனுர்.

★

செல்லம்மாவின் பேச்சினைக் கேட்டு அதிர்ச்சியடைந்த வசந்தமலர் குமுறும் எரிமலையானுள்.

பொன்னம்பலம் சொன்னபடி கேட்டிருந்தால் இன்றைக்கு வசதியாக வாழலாம் என்று செல்லம்மா சொன்னதைக் கேட்ட பின்னர்தான் எதற்காக செல்லம்மா தனது பேச்சினை தொடங்கும்போது அவ்விதம் தொடங்கினுள் என்பதை வசந்தமலரால் உணர முடிந்தது.

கந்தமூர்த்தியின் செத்தவீடு முடிந்த பின்னர் ஒரு நாள் மாலைப் பொழுதில் பொன்னம்பலம் வந்ததையும் ரவுணில் வீடு எடுத்துத் தருவதாகவும் மாதம் மாதம் செலவுக்குகூட காசு தருவதாகவும் கூறியதை அவள் அப்போது நினைத்துக் கொண்டாள். பொன்னம்பலம் எந்த அடிப்படையில் அப்படிக் கேட்கிருர் என்பதை அப்போது வசந்தமலரால் ஊகித்துக்கொள்ள முடியாவிட்டாலும் அவருக்கு வந்தனம் கூறி திருப்பி அனுப்பியதையும் பிறகு கோயிலடிக்கு அடிக்கடி தான் போகின்ற நேரங்களில் வந்ததையும் அப்படி வந்து தான் நிற்பதைக் காட்டுவதற்காக செருமிக் கொண்டதையும் பிறகொருநாள் மிகுந்த தாபத்துடன் 'வசந்த மலர்' என அழைத்ததில் இருந்து தான் பொன்னம்பலத்தின் நோக்கத்தை வசந்தமலர் தெளிவாக புரிந்துகொண்டாள்.

தனக்கு வீடு எடுத்துத்தந்து வாழ்க்கை செலவுக்கு பணம் தருவதாகவும் கூறியது தன் மேல் கொண்ட பரிதாபத்தால் அல்ல. தன்னுடைய தனிமையும் இளமையும்தான் என்பதை உணர்ந்துகொண்ட போது பொன்னம்பலத்தின் மீது வசந்தமலருக்கு தீராத வன்மம் ஏற்பட்டது.

பொன்னம்பலத்தின் நடவடிக்கைகளால் தங்கலட்சுமியும் மற்றவர்களும் தன்னை கூடாதமாதிரி நினைப்பதையும் கேட்டு நீறுபூத்த நெருப்பாக இருந்த வசந்தமலரின் கோபம் செல்லம்மாவின் பேச்சால் பிரகாசமாக எரிய ஆரம்பித்தது.

செல்லம்மா பொன்னம்பலத்துக்காக பரிந்து பேசுகின்ருளா? அல்லது பொன்னம்பலம்தான் செல்லம்மாவை அனுப்பி எனது நிலையை அறிய முற்படுகின்ருரா? என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை.

''பொன்னம்பலத்தாரின் கதை இஞ்சை என்னத்துக்கு'' என்று சற்று காரசாரமாகவே வசந்தமலர் செல்லம்மாவிடம் கேட்டாள்.

''இஞ்சைபார் வசந்தமலர் கோபப்படாதே. கோவிச்சு ஒரு பிரயோசனமும் இல்லை. நீயும் உன்ரை பிள்ளையும் நல்லாய் இருக்கவேணும் என்றதுக்காகத்தான் நான் இப்ப வந்தனுன்'' செல்லம்மா சொன்னுள்.

''ஏதேனும் அநாதை விடுதி இருந்தால் சொல்லுங்கோ'' என்ருள் பதிலுக்கு வசந்தமலர்.

''எடி விசரி உனக்கு ஏன் மூளை குறுக்கால வேலைசெய்யுது. உனக்கு என்னகுறை இருக்குது. வயதுதான் போட்டுதோ? அல்லது வடிவுதான் இல்லையோ நீ நினைச்சால்'' என்று செல்லம்மா பேச்சைத் தொடர முற்பட அவளை இடைமறித்தாள் வசந்தமலர்.

''நீங்களும் ஒரு பொம்பிளைதானே தாலியறுந்துபோய் இருக்கிற என்னட்டை உதுகள் எல்லாம் கதைக்கிற கதையே''

''ஏன் அவசரப்படுகின்ருய். நான் இப்ப என்ன கதைச்சுப் போட்டன் மடக்கதையெல்லே கதைக்கிருய்''

''நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்'' என்று வசந்தமலர் கேட்டாள். அவள் கேள்வியில் உஷ்ணம் தெரிந்தது.

''அப்படிக்கேள் உனக்கு வயது இருக்குது ஆனுல் உன்னை இரண்டாம் தாரம் கலியாணம் செய்ய யாரும் சம்மதிக்கமாட்டான்கள். அப்படியென்ருலும் எங்கேயும் கிழடு கட்டைதான் அகப்படும். ஆனுல் நீ ஆண் துணையில்லாமல் சீவிக்கமாட்டாய்''

''ஐயோ என்னை சித்திரவதை செய்யாதேங்கோ, கொஞ்சம் நஞ்சையாவது தாங்கோ. குடிச்சு நிம்மதியாக செத்தாவது போவம்'' என்று வசந்தமலர் சொல்லுட போது அவள் கண்கள் கலங்கின.

(8 ம் பக்கம் பார்க்க)

---

குட்டிக்கதை

## பெட்ரோலும் தீப்பெட்டியும்

தகர டப்பாவில் இருந்த பெட்ரோலைப் பார்த்துத் தீக்குச்சி சொன்னது— உன்னை என்னுல் அழிக்க முடியும். பெட்ரோல் சொன்னது— உன்னை அழித்துத்தான் நீ என்னை அழிக்க முடியும். இதை உணர்ந்துகொள் என்றது. தீக்குச்சி அமைதியானது.

—பாணபத்திரன்

---

# வீடியோவும் விளைவுகளும்

லண்டனில் உள்ள பள்ளிகளில் பயிலும் 9—11 வரையிலான மாணவர்களை அவர்களின் ஆசிரியர்கள் பாட நேரங்களில் தூங்க அனுமதிக்கின்றனர். அவர்கள் இரவில் வெகுநேரம் கண்விழித்து டெலிவிஷன், வீடியோ போன்றவற்றைப்பார்ப்பதால் நேரும் விபரீதம் இது.

ஹாரி கிரீன்வே என்ற பிரிட்டிஷ் எம். பி. ஒருவர் சமீபத்தில் ஒரு பள்ளிக்குச் சென்றபோது அங்கே காலை 10-30 மணியளவில் இரண்டு குழந்தைகள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கக்கண்டார்.

நமது நாட்டிலும் வீடியோவும், தொலைக்காட்சியும் வெகுவாகப் பரவிவருகின்றன. இதனுல் சிறுவர்கள் மட்டுமன்றி உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் உடல்நலமும் படிப்பும் கெடுகின்றன. இதனுல் பிற்காலத்தில் நாட்டின் வளர்ச்சி முழுவதும் தடைப்படும் என்பதில் ஐயமில்லை. [illegible] இவை நாட்டில் பெருகப் பெருக இதைப் பார்க்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் பெருகும். அவர்களுக்குத் தாங்கள் இதனுல் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிருேம் என்பது தெரியாது. தெளிவாகப் படங்கள் தெரிவதில்லை என்பதற்காக அருகிலேயே அமர்ந்து பார்ப்பவர்களும் உண்டு. இவ்வாறு தொடர்ந்து பார்ப்பதால் ஒளிக்கதிர்களின் பிரதிபலிப்பினுல் கண்ணுக்குக் கெடுதல் ஏற்படும். மேலும் தலைவலி போன்ற தொல்லைகளும் தோன்றும். இந்தத் தலைவலி ஆரம்பத்தில் மிக லேசாக இருக்கும். ஆனுல் இது கண்களும் மூளையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன என்பதை உணர்த்தும் அறிகுறியே.

ஆஸ்திரேலியாவின் நாஷனல் யுனிவர்சிட்டி சென்ரரில் தகவல் ஆராய்ச்சித் துறையில் பணியாற்றும் டாக்டர் ரெட் எமர் என்பவர் 1976 இல் டெல்லியில் தேசியத் தொழிலாளர் கழகத்தில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்தார். அங்கே அவர் உரையாற்றுகையில் டெலிவிஷன் போன்றவற்றைப் பார்ப்பதால் மூளையின் செயல்திறன் மந்தமடைந்து நாளடைவில் அது செயலற்றதாகிவிடும் என்ருர்.

டாக்டர் எம்.ரி.என்பவரும் அவருடைய சகாக்களும் இது பற்றி ஆராய்ந்து சினிமாத் திரையில் படம்பார்க்கும் போது ஏற்படும் பாதிப்பை விட தொலைக்காட்சிப்பெட்டியில் பார்க்கும்போது மூளையின் செயல் பெரிதும் பாதிக்கப்படும் என்றும், பரந்த திரையில் பார்க்கும்போது அதன் பாதிப்புச் சற்று குறைவாகவே இருக்கும் என்றும் கூறினுர். ஏனெனில் சினிமாத் திரையில் தொடர்ந்து பல ஒளிக்கற்றைகள் முழுப்படத்தின் பிம்பத்தை ஏற்படுத்துகின்றன. ஆனுல் தொலைக்காட்சிப் பெட்டியில் ஒரே ஒரு தனித்த ஒளிக்கதிர் மட்டுமே முழு அளவிற்கும் பிம்பத்தை ஏற்படுத்துகின்றது. இது தொடர்ந்து டி. வி. திரையில் ஒளிர்ந்து கொண்டிருக்கும். எனவே மூளையின் செயலை இது மந்தமாக்குகிறது என்கின்றனர்.

நாமும் டெலிவிஷன் வீடியோக்களால் ஏற்படும் ஆபத்தை ஓரளவு உணர்ந்தே இருக்கிருேம். கடந்த சுமார் நூறு ஆண்டுகளாக நோயாளிகள் இயற்கையான உணவு.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோகிலா மகேந்திரனின்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

வும் இரசித்த பாத்திரம் மூர்த்தி மாஸ்டர்.

''வலியின் நிலைமையான்
வல்லுருவம் பெற்றம்
புலியின் தோல் போர்த்து
மேய்ந்தற்று''

என்ற குறளுக்கு ஒரு உருவம் கொடுத்தது போன்ற படைப்பு. குறள் கற்பிப்பதில் புதிய உத்தி!

பத்மநாதன் மாஸ்டர் பாவம். மனைவிக்குப் பயந்தார் போலும். பூரணியிடம் சண்டித்தனம் தனக்குள்ளேயே காட்டித் (வெளியில் இல்லை) தனது மன உளைச்சலைத் தீர்த்துக்கொண்டார். ஒரு வரியில் கோடி வியாக்கியானங்கள்.

துயிலும் ஒரு நாள் கலையும் என்ற நாவலில் வரும் பாத்திரங்கள் போன்ற மக்கட்கூட்டம் அன்றும் வாழ்ந்தனர் இன்றும் வாழ்கின்றனர். இனி மேலும் வாழப்போகின்றனர். இப்படியான படைப்புகள் காலத்தால் பழுதுபடாத சமுதாயத்தைச் சீரதிருத்துவதே யாகும். இயந்திரங்கள் போல் செயற்படும் என்பது எனது நம்பிக்கை. துயில்பவர்கள் துயில் கலைந்து எழுவர் என்பது எனது எண்ணம்,

## மக்களை காப்பாற்ற

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அரைஇருத்தல் பாண் கிடைத்தது. பக்கத்தே தனது குழந்தைகள் பசியுடன் நிற்பதையும் அசட்டை செய்து அந்தக் குடும்பத் தலைவன் அந்தப் பாணினை லபக் லபக் என்று தின்றுவிட்டான். பசிவரப் பத்தும் பறந்துபோம்...பஞ்சத்தில்பட்ட வடு தீராது எனவே தன்மானத்தை விரும்பும் எவரும் இந்த மாற்றுணவு யுத்தத்தைக் கேலி செய்தல் முடியாது.

காரை, முசுட்டை, முன்னை, கருவேப்பிலை, முருங்கையிலை, தூதுவளை என்பன நாம் புறக்கணிக்கக்கூடியவை அல்ல! இவற்றை உடனே உற்பத்தி செய்தல் இலகு அல்ல. இருப்பவற்றையாவது பாதுகாப்போம். இன்னல் அடைந்த நேரம் இலைக்கஞ்சியாவது குடிக்கலாம்.

சிறு தானியங்கள் அரிசியை விடச் சத்தானவை. சோளம், இறுங்கு, சாமை. தினை என்பன பழையபடி எமது தோட்டங்களிலே சாகுபடி செய்ய வேண்டும் பஞ்ச நிலைமை தோன்றாமல் இவை எம்மைத் தற்காக்கும்.

19-ம் நூற்றுண்டில் பிரிட்டனை ஆண்டவர் விக்டோரியா மகாராணி. இயற்கையை மிஞ்சிய வளங்கள் இனிமையற்றவை என அவர் குறிப்பிட்டு உள்ளார். விக்டோரியா மகாராணிக்கு 9 பிள்ளைகள் ஆயினும் ஒருபோதும் அவர் தனது குழந்தைகளுக்குப் பால்மாக்கள் கொடுத்தது கிடையாது. தாய்ப் பாலே கொடுத்து வளர்த்தார். மறுகருத்தில் விக்டோரியா மகாராணி எமக்குச் சொல்வது யாதெனில் எம்மிடமே வளம் இருக்கப் பிறரிடம் கையேந்தல் அழிவுக்கே வழிவகுக்கும்.

# மரமுந்திரிகைச் செய்கைக்கு தரிசு நிலம் ஏற்றது

யாழ். மாவட்டத்தில் மணற்கண்டமாகவும், கரையோர முருகைக்கல் தரையாகவும் தாழ்ந்த நிலத்தரையாகவும் உவர் சவர்த் தரையாகவும், சிறு பற்றைக்காடுகளாகவும் ஏறத்தாள 50,000 கெக்டர் வரையில் பயிர் செய்யப் படாத தரிசு நிலம் உள்ளது. இப்பகுதியைப் பயன்படுத்துவதற்குப் பயிரினங்கள் தெரிவு செய்யப்படவேண்டியது அவசியமாகும். பற்றைக்காடுகளும் மணற்பகுதிகளும் ''மரமுந்திரிகை'' பயிரிடுவதற்கு உகந்தவை. இவை அம்பன், குடத்தனை, செம்பியன்பற்று, தாளையடி, சாவகச்சேரி. நாவற்குழிப் பகுதி, அரியாலை, தீவுப்பகுதிகள், அராலி, மாதகல் ஆகிய இடங்களில் நன்கு வளரும்.

டும் 6—8 கிழமைகளில் கன்றுகள் நடக்கூடிய பருவம் அடைந்துவிடும். நடுகைக் காலம் ஐப்பசி, கார்த்திகை ஆகும்.

1—1½ வருடம் வரைக்கும் கன்றுகளை நீர் ஊற்றி பசளை இட்டுப் பராமரிக்க வேண்டும். நட்டு 3—4 வருடங்களில் மரம் பூக்க ஆரம்பிக்கும்.

மரமுந்திரிகையில் பூச்சி புழுத் தாக்கங்கள் மிகவும் குறைவு. ஆனல் பூக்கும்காலத்தில் சத்திகளினலும் மழையினலும் பூ உதிர்ந்துவிடும். ஆகவே பூத் தத்திகளைச் கட்டுப்படுத்துததற்கு B. H. C. தூள் அல்லது லெடசிட் விசிறிக் கட்டுப்படுத்துவது அவசியம். வெட்டும் வண்டு இம்மரத்தைத் தாக்கும் முக்கிய பூச்சியாகும். இதற்கு மெற்ருசிஸ்

### கே. குணரத்தினம்

(விவசாய உத்தியோகத்தர்)

மரமுந்திரிசையில் பல இனங்கள் உண்டு. யாழ். மாவட்டத்திற்கு மன்னர், மட்டக்களப்பு, பூநகரிப் பகுதியில் பயிரிடும் இனங்கள் பொருத்தமானவை. இவை நடுத்தரமான பருமன் உடைய பருப்பை உடையவை. இவற்றிற்கு நல்ல வெளிநாட்டுச் சந்தை மானம் உண்டு.

தை, மாசியில் மரமுந்திரிகை பூக்க ஆரம்பிக்கும் சித்திரை, வைகாசியில் அறுவடை செய்யலாம் மரமுந்திரிகை நடுவோர் இப்போதே விதைதேடி வைத்தல் வேண்டும்.

**நடுகை முறை:**

ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் விதைகளை காணிகளில் நேரே 1½'X1½'X1½' ஆக வெட்டப்பட்டு சேதனப் பசளையினல் நிரப்பப்பட்ட குழிகளில் 2-3 விதை விதைத்துப் பயிரை உற்பத்தி செய்யலாம். ஒவ்வொரு நடுகைக் குழிகளுக்கு இடையிலுள்ள நூரம் 30'X35' ஆக இருக்க வேண்டும். ஆகவே ஏக்கரில் 40—50 கன்றுகள் இருக்கும்.

2-வது நடுகை முறையாக இம்முறையைக் கையாளலாம். பசளை மண் அடைத்த பொலித்தின் பையில் விதையை இட்டு அல்லது பொச்சுமட்டையில் பசளை மண் இட்டு விதையைப் போட்டு மண்ணல் மூடி முளைக்கச் செய்து நடவேண்டிய நிலையங்களில் நடலாம்.

3-வது முறையாக மணற் படுக்கையில் விதையை முளைக்கச் செய்து, முளைத்தபின் கன்றுகளை நடவேண்டிய நிலையங்களில் பசளைபோட்ட குழிகளில் நடவேண்டும். நீர் ஒழுங்காகக் காலையும் மாலையும் பூவாளியினல் ஊற்றவேண்

ரொஸ் கிருமிநாசினி அடித்துக் கட்டுப்படுத்தலாம்.

5—6 வருடங்களுள் மரமுந்திரிகை முழுமரமாக வளர்ந்து பயன்தரத்தொடங்கும் இதன் உச்சவிளைவு 10-ம் வருடத்தில் கிடைக்கும். ஏறத்தாள 30-40 வருடங்கள் இப்பயிர் பொருளாதாரப்பலனைக்கொடுக்கும். வருடம் ஒன்றுக்கு நல்லமுறையில் பராமரிக்கப்பட்ட ஒரு மரத்திலிருந்து ஏறக்குறைய 1—1½Kg சுத்தமாக்கப்பட்ட பருப்புப் பெறலாம். ஆகவே 1 ஏக்கரில் இருந்து 40Kg-60Kg பருப்புப் பெறக்கூடியதாக இருக்கும். உள்நாட்டுச் சந்தையில் 1Kg பருப்பு 100 ரூபா வரை விற்கப்படுகின்றது. 1 ஏக்கரில் 4000 ரூபா தொடக்கம் 6000 வரை வருமானம் பெறலாம்.

இத்துடன் பழங்களைச் சந்தைப்படுத்துவதாலும் கோதில் இருந்து எடுக்கப்படும் திரவத்தில் இருந்தும் (C N. S. L) ஏறக்குறைய 200-00 ரூபா மரம் ஒன்றுக்குப் பெறமுடியும்.

மரமுந்திரிகைப் பருப்பை விட பருப்புக் கோதிலிருந்து பெறப்படும் திரவமும் ஒரு ஏற்றுமதிப் பொருளாகின்றது இது கைத்தொழிலுக்குரிய மூலப் பொருளாகும்.

இலங்கையில் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் இப்பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கு மானியம் வழங்குகின்றது அத்துடன் கூட்டுத்தாபனத்தின் கீழும் முந்திரிகைத் தோட்டங்கள் பராமரிக்கப்படுகின்றது.

முந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின்கீழ் 9000 ஏக்கரும் மானியத் திட்டத்தின்கீழ் 14.000 ஏக்கரும் தனியார் பயிர் செய்கையில் 10,000 ஏக்கரும் ஏறக்குறைய 34 000 ஏக்கர் இலங்கையில் உண்டு. யாழ், மாவட்டத்தில் தற்போது 15 கெக்டரில் இப்பயிர் செய்கை பண்ணப்படுகிறது.

1978ம் ஆண்டு மானியத் திட்டம் ஆரம்பமானது. 10 ஏக்கருக்கும் 10 ஏக்கருக்கு குறைந்தவற்றுக்கும் மானியமாக ரூபா 600-00ம் 10 ஏக்கருக்கு கூடுதலானதற்கு ஒவ்வொரு ஏக்கருக்கும் மானியமாக ரூபா 200-00ம் வங்கிக் கடனக ரூபா 800-00ம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மானிய உதவித் திட்டத்தை துரிதப்படுத்தும்படி மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தை அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பகுதி உதவி அரசாங்க அதிபர்களுக்கு இப்பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்காக அவர் அவர் பகுதியில் நடுவதற்கு விதைகளை விவசாய இலாகாவிடம் இருந்து பெற்றுக் கொள்ளும்படி பணித்துள்ளார்.

மரமுந்திரிகைச் செய்கையினல் மரமுந்திரிகை பதனிடும் தொழிற்சாலைகள் ஜாஎலை, மினுவாங்கொட ஆகிய இடங்களில் அமைந்துள்ளது.

யாழ். மாவட்டத்திலும் இப்பயிர்ச் செய்கையை தரிசாக இருக்கும் நிலங்களில் விஸ்தாித்தால் சுயதொழில் வாய்ப்புக்களும் மக்களுக்கு வருமானமும் அதிகரிக்கும் என்பதை உறுதியாகக் கூறலாம்.

மேலதிக விபரங்களுக்கு உங்கள் பகுதி விவசாய உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

## வீடியோவும் விளைவுகளும்

[7ம் பக்கத் தொடர்ச்சி]

மற்றும் வாழ்க்கை முறைகளைக் கொண்டிருந்தாலும் கூட குணமடையவில்லை என்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்கள் இன்னும் தொலைக்காட்சியை நோக்கும் பழக்கத்தை விடவில்லை என்பதே. டெலிவிஷன் பார்ப்பதைவிட வீடியோ பார்ப்பது பல மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.

இதனல் குழந்தைகளின் உடல் நலம் கெடுவதுடன், படிப்பும் தடைப்படுகிறது. பெரியவர்கள் பலவித நீடித்த தொல்லைகளுக்கு உள்ளாக நேருகிறது எனவே அதை ஒரு பொழுது போக்காக மேற்கொள்ளாதீர்கள். பொழுது போக்கு என்பது நம்மைச் சாந்தப்படுத்துவதாக, மன இறுக்கத்தைத் தளர்த்துவதாக இருக்கவேண்டும் ஆனல் தொலைக்காட்சி வீடியோ போன்றவற்றைப் பார்ப்பதால் உடல் நலம் கெடவே வாய்ப்புகள்உள்ளது. ஏற்கனவே உடல்நலமற்றவர் மீண்டும் தொடர்ந்து 'வீடியோ' பழக்கத்தை நிறுத்தாவிட்டால் அவர்களை இயற்கை மருத்துவமுறையால் கூடக் குணமாக்குவது சிரமம். எனவே உடல் நலம் காக்க எண்ணுபவர்கள் இதைக் கருத்தில்கொண்டு செயல்படுவது நல்லது.

தொகுப்பு: க. கனகராசா,

## நான் கடவுள் இல்லை

தமிழ்ப்பெரியார் ஒருவரின் சமாதியில் கடவுள் இல்லை என்று எழுதப்பட்டது. இவருக்கு எதிர் மாருய் நான் கடவுள் என்பவர்களுடைய குரல் கோசமிட்டது. பண்டிதமணி அவர்கள் வழங்கிய தீர்ப்பு ''நான் கடவுள் இல்லை''

—நன்றி மில்க்வைற் செய்தி

## வேம்படியில் ஒரு கலையரங்கு

கடந்த 30-5-86 வெள்ளியன்று வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் பாடசாலைக்கு வேண்டிய நிதி திரட்டும் முகமாகக் கல்லூரி ஆசிரியர்களால் ஒரு கலையரங்கு நடாத்தப்பட்டது.

பாடசாலை சங்கீத பூஷணங்களும் சங்கீத ஞானம் உள்ள ஆசிரியர்களும் மேடையேறித் தேன் மாரி பொழிந்தனர். தொடர்ந்து நாட்டிய வாசனையே அற்ற ஆசிரியர்களும் கூட நடன நிகழ்ச்சிகள் அளித்தமை - அவர் பொதுவான ஆர்வத்தினையும், திறமையினையும் எடுத்துக்காட்டின

கல்லூரியின் கதையினைக் கருவாகக் கொண்டு அமைந்த வில்லுப்பாட்டு மிகப் பிரமாதமாக அமைந்து பாராட்டினைப் பெற்றது.

''வியன்ன ஸ்பெஷலிஸ்டின் சத்திர சிகிச்சை'' பாராட்டுக்குரியது.

உலகப் புகழ்பெற்ற நாடக மேதையாகிய ஷேக்ஸ்பியரின் 'மனிதரின் ஏழு பருவங்கள்' 'கோல் அரசனின் சபா மண்டபம்' 'கோலாகலமான ஆடல் பாடல்' ஆகிய ஆங்கில நிகழ்ச்சிளும் வியப்பினை ஊட்டும் வண்ணம் அமைந்தன.

தாம் ஏற்ற வேடத்திற்குப் பொருத்தமாக மேடையில் தோன்றியஆசிரியர்களை இனம் கண்டுகொள்ள முடியாதபடி மாணவிகள் திணறினர்கள்.

வேம்படி ஆசிரியர்கள் திறமை கலைத்துறையிலும் மிஞ்சி நின்றதைக் காணக் கூடியதாயிருந்தது. அவர்கள் தமது திறமையினை நிரூபித்து விட்டார்கள்.

—இரசிகை.

# தொடர் நவீனம்

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

''சரியான முட்டாள். பெட்டையாக இருக்கிருயே. ஆண்பிள்ளை துணையில்லாமல் நீ எப்படி சீவிப்பாய். உன்னை நிம்மதியாக சீவிக்க எவன் தான் விடுவன். அதுக்குத் தான் சொல்லுறன் நீ மாத்திரம் சம்மதித்தால் ராணி மாதிரி இருக்கலாம். அவர் பொன்னம்பலம் எவ்வளவு பெரிய முதலாளி ரவுணில வீடு எடுத்து தருவர். வசதியாக வாழலாம் அவருக்கு என்னவோ சரியான விருப்பம். அவருக்கு உன்னில ஒரு சரியான இது......'' என்று செல்லம்மா பேச்சை இழுத்தாள்.

''ஏன் செல்லம்மாக்கா பேச்சை இழுக்கின்றீர்கள் பொன்னம்பலத்துக்கு வைப்பாட்டியாக இருக்கிறியோ? என்று நேரடியாக கேட்கிறதுக்கு சுற்றி வளைத்து கதைக்கிறியள்.... '' என்று வசந்த மலர் சொல்லி முடிப்பதற்குள் அவள் விம்மி வெடித்து அழுவதற்கு ஆயத்தமானுள்.

''ஏன் அப்பிடிக்கேட்டால் என்னவாம். அவர் பொன்னம்பலத்துக்கு என்ன குறை! அவரின்ரை தயவு உனக்கு கிடைக்க நீ கொடுத்தல்லே வைக்கவேண்டும். ஏதோ உலகத்தில இல்லாததைக் கேட்கிற மாதிரி நீ கதைக்கிருய். காசு வசதியுள்ளவன்கள் எல்லாரும் உப்பிடித்தானே. நீ ஏதோ பெரிய விசயமாக தூக்கிப்பிடித்து ஒப்பாரி வைக்க வெளிக்கிட்டுவிட்டாய். பொன்னம்பலம் தனிய உன்ரை வடிவில விரும்பவில்லை. உன்னில அவருக்கு ஒரு பரிதாபமும் இருக்குது''

''நல்ல பரிதாபம் என்னில தான். பரிதாபமோ அல்லது ஊரில இருக்கிற எல்லா பெண்களிலும் பரிதாபமோ? பெத்த தேப்பனை முறையாய் பார்க்க தெரியாதபிள்ளை இப்ப எனக்கு உதவி செய்ய வெளிக்கிடுகின்றரே. கந்தையருக்கு ஆன உதவியில்லை. நல்ல சாப்பாடு இல்லை. அந்த வீட்டில மரியாதை இல்லை. அந்த மனிசன் எவ்வளவு கஷ்டப்படுகுது. பெத்த தேப்பனில பரிதாபம் வரவில்லை... என்னில மாத்திரம் பரிதாபம் வந்துவிட்டதோ''.

''பிள்ளை உந்தக் கதையை விட்டிட்டு விசியத்துக்கு வா'' என்ருள் செல்லம்மா.

''என்ன விசியம். பொன்னம்பலத்துக்கு துணிவு இருந்தால் அல்லது அவர் ஒருமுறையான ஒரு ஆண்பிள்ளையாக இருந்தால் செத்தவீட்டு செலவுக்காக என்னிடம் இருந்து வேண்டின தாலிக்கொடியை பழையபடி என்ரை கழுத்தில பகிரங்கமாக கட்டுவாரா?'' என்று வெறிபிடித்தவள் போல வசந்தமலர் கேட்டாள்.

(வளரும்)

## ஆரம்பக்கல்வி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த பதினைந்து ஆண்டுக் காலத்தில் ஆரம்பக் கல்வி, கருத்துள்ளதாகவும், குழந்தைகளின் அபிலாஷைகளை முதன்மையாகக் கொண்டு வளர்ந்துள்ளது. புதிய கல்விச் சிந்தனைகள், ஆய்வுகள், அபிவிருத்தி முயற்சிகள் காரணமாக இலங்கையில் மற்றெந்தக் கல்வித்துறையிலும் பார்க்க ஆரம்பக் கல்வி, அதன் மாணவர் தொகை அதிகரிப்பு கல்வியின் தரத்தில் மேம்பாடு ஆகியவற்றில் முன்னேற்றம் கண்டுள்ளது என்று கூறுவதை யாவரும் ஏற்பர்.

(இன்னும் வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஈழநாடு' அனுசரணையுடன்
யாழ். இலக்கியவட்டம் நடாத்தும்
மதுரகவி

## இ. நாகராஜன் நினைவுக் குழந்தைப்பாடல் தொகுப்புப்போட்டி

முதலாம் பரிசு - ரூபா 300-00
இரண்டாம்பரிசு - ரூபா 200-00

நிபந்தனைகள்:

★ பல்வேறுபட்ட பதினாறு தலைப்புகளில் குழந்தைப் பாடல்கள் ஒவ்வொன்றும் பதினைந்து வரிகளுக்கு மேற்படாதிருக்கவேண்டும்.

★ தழுவல், மொழிபெயர்ப்பு, ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

★ போட்டியாளர் தனது பெயர், முகவரி முதலியவற்றைத் தனித்தாளில் எழுதி கவிதையுடன் இணைத்து அனுப்புதல்வேண்டும்.

★ நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.

★ முடிவு திகதி:- 28-07-1986

★ கவிதைகள் தபாலில் மட்டுமே அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மதுரகவி இ. நாகராஜன் நினைவுக் குழந்தைப் பாடல் போட்டி எனக் குறிப்பிடல் வேண்டும்.

★ கவிதைகள் அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்,
'ஈழநாடு' வாரமலர்,
த. பெ. இல. 49,
யாழ்ப்பாணம்.

## பூமிதானம் தேவை

யாழ். வை. எம். சீ. ஏ. பாதிக்கப்பட்டவர்களுக்காக இயக்கச்சி, கந்தர்மடம் முதலிய இடங்களில் 79 வீடுகள் இதுவரை கட்டிக்கொடுத்து உதவிசெய்துள்ளனர். மேலும் ரூபா 15,000 பெறுமதியில் சில வீடுகளைக் கட்டி உதவுவதற்கு நிதி உதவ எமது தலைமை ஸ்தாபனம் முன்வந்துள்ளது. இந்நல் நோக்குக்காக இயக்கச்சியில் 10 ஏக்கர் காணியைக் கொடையாக அல்லது குறைந்த கிரயத்துக்கு தந்துதவுமாறு இயக்கச்சியில் காணி உடைய மக்களை வேண்டுகின்றோம்.

காரியதரிசி,
வை. எம். சீ. ஏ., யாழ்ப்பாணம்.
[A-837]

## பிரார்த்தனையும் அஞ்சலியும்

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்டு அகால மரணமான சகோதரர்களையிட்டு ஆழ்ந்த கவலையடைகிறோம். அவர்களின் ஆத்மா சாந்தியடைய துர்க்கையம்பாளை பிரார்த்தனைசெய்கிறோம்.

இங்ஙனம்,
பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா,
[தர்மகர்த்தா]
துர்க்கையம்பாள் தேவஸ்தானம்,
நுணுவில் மேற்கு,
சாவகச்சேரி.
[C 2886]

## 5-வது வருட பைத்துல் மால் நிதி
(யாழ்ப்பாணம்)

'யாழ். முஸ்லிம் தனவந்தர்கள் தாங்கள் வழங்கும் கடமையான ஸகாத் பணத்தின் ஒரு பகுதியை பைத்துல் மாலுக்கு வழங்கியிருந்தது போன்று 5-வது வருடமும் பைத்துல்மால் நிதிக்கு தந்து தமது பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தமை மகிழ்ச்சிக்குரியதாகும்' என்று ஜமா அதே இஸ்லாமி பயிற்சி மன்றம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பைத்துமால் நிதிக்கு ஸகாத் பணமாக ரூபா அறுபத்தேழாயிரத்து நானூற்றியம்பது ரூபா கிடைத்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில்.,.
(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டும். அங்கத்தவர்ன் உற்பத்தி வலுவுக்கேற்ப தடையின்றி மரங்கள் வழங்கப்படும். உற்பத்தி செய்யப்படும் கள் முழுவதும் சங்கத்திற்கு ஒப்படைக்கப்படவேண்டும்".

"மேற்கூறப்பட்ட விதிமுறைகளை சங்க ஊழியர்கள் புனருத்தாரணக்குழு உறுப்பினர்கள் நடைமுறைப்படுத்தும்போது அவர்களது வெளிக்கள வேலைகளைத்தடுப்பவர்கள் அவர்களுக்கு ஊறு விளைவிக்க முயலுபவர்கள் மீது கூட்டுறவுப் புனருத்தாரணக் குழு கடும் நடவடிக்கை எடுப்பதுடன் இதனால் சங்கத்திற்கு ஏற்படும் நட்டத்தையும் அவர் செலுத்த வேண்டி ஏற்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)


Lipton

லிப்டன் லாவோஜி பிரியர்களுக்கோர் நற்செய்தி

புதிய குறைந்த விலையில், அதி நிறைந்த சுவையுடன் "லிப்டன்" வாசகம் பொறிக்கப்பட்ட அலுமினியம் சுற்றுத்தாளில் அடைக்கப்பட்டு புதிய பொலிவுடன் "லாவோஜி" தேயிலைப் பக்கட்கள் இப்பொழுது எங்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

போலி லிப்டன் லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதனால் லாவோஜி தேயிலை வாங்கும்போது, மேற்கூறப்பட்ட முக்கிய அம்சங்களை அவதானித்து அசல் லாவோஜியை உங்கள் மொத்த, சில்லறை, வியாபாரிகளிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.




புதிய விலை: ரூபா 3/60 (50 கிரும்)

லிப்டன் சிலோன் லிமிட்டெட்,
த. பெ. எண் 86,
கொழும்பு.

லிப்டன் லவோஜி
அதி சிறந்த தேயிலைத் தூள்

A 493


## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி பத்மாவதி செல்வரட்னம்

தோற்றம்: 10-06-1920
மறைவு: 16-05-1986

பாலூட்டி வளர்த்து
எம்மை
பரிதவிக்கவிட்டுவிட்டாய்
கண்ணிமைக்கும் நேரத்
தில் காலதேவன்
கவர்ந்து விட்டானம்மா
அண்ணனை இழந்து
இன்னும்
ஆறுதிங்கள் கழியவில்லை.
உன்னையையும் இழந்து
இப்போ அனாதைகளாகி
விட்டோம்
அடுக்கடுக்காய் இழவுவந்து
ஆதரிப்பார் எவருமின்றி
நடைப் பிணமாகிஇப்போ
நட்டாற்றில் விடப்பட்
டோம்.

எம்மை வாழவைத்த
தெய்வமே! எம்மைவிட்டு
பிரிந்தாலும் உங்கள்
நினைவு எம்மை விட்டு
அகலா.

மக்களும், மருமக்களும்.

வங்கி ஒழுங்கை,
சுன்னாகம்.

C 2894

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் மறவா நன்றி கூறுகிறோம்

10 06-86ல் அரசபடையினரால் படுகொலைசெய்யப்பட்ட குருநகர் கடற்றொழிலாளரின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகளைச் செவ்வனே நிறைவேற்ற ஓய்வு உறக்கமின்றிப் பிரேதபரிசோதனைகளை நடத்திமுடித்த பேராசிரியர் எஸ். சரவணபவான் அவர்கட்கும் அவருக்குத் துணையாய் நின்ற வைத்தியர்கள், யாழ். பல்கலைக்கழக மருததுவ மாணவர்கள், ஊழியர்கள், ஆகியோருக்கும் தாமதமின்றி மரணவிசாரணை நடாத்திய மாவட்ட நீதிபதி, மரணவிசாரணை அதிகாரி, கிராமசேவகர்களுக்கும் வேண்டிய உதவிகளை வழங்கிய அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள், பிரசைகள் குழுத்தலைவர் உறுப்பினர்க்கும், திருப்பலி ஒப்புக் கொடுத்து ஈமக்கிரியைகள் நடாத்திய யாழ். ஆயர், குரவர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம. மேலும் இறுதிக கிரியைகளில் கலந்துகொண்டும், அனுதாபச் செய்திகள் வெளியிட்டும், மலர்வளையங்களை வைத்தும், தம கவலையைத்தெரிவித்த, வர்த்தக, அரசாங்க, வங்கி, மாநகரசபை அதிகாரிகள், ஊழியர்கள், கடற்றொழில் சங்கங்கள், சனசமுக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொது ஸ்தாபனங்கள், பொதுமக்கள் அனைவருக்கும் எமது நன்றியைக் கூறுகிறோம். மற்றும் வீடியோ படப்பிடிப்பாளர்கள், புகைபடப்பிடிப்பாளர்கள், ஒலி, ஒளி அமைப்பாளர்களுக்கும், ஈசன்ஸ் ஸ்தாபனத்தாருககும், மெய்வருத்தம் பாராது பலபணிகளையாற்றிய இளைஞர்களுக்கும், குருநகர் பொது அமைப்புகளுக்கும், வாகனசேவை வழங்கியோருக்கும, எல்லாவற்றிற்கும் மேலாக பூதவுடல்களை மண்டைதீவிலிருந்து மீட்டுவந்து ஒப்படைத்தவர்களுக்கும, இவ்வகால நிகழ்ச்சியாலேற்பட்ட செலவுகளைப் பொறுப்பேற்ற கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்திற்கும் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி என்றும மறவா நன்றியைக் கூறுகின்றது.

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி.
(குருநகரிலுள்ள பொது தாபனங்களின் ஐக்கிய அமைப்பு)

[A-339]

## கூட்டிச் செல்லப்பட்டவர்கள் கொலையுண்டனர்

(மாவிட்டபுரம்)

இரவுநேரம் வீட்டில் வந்து கூட்டிச் செல்லப்பட்டவர்கள் மறுநாள் வயல்வெளியில்வெட்டுககாயங்களுடனும், எரிகாயங்களுடனும் மர்மமான முறையில் கொலையுண்டு கிடந்தனர்.

கடந்த வியாழன் இரவு மல்லாகம் சல்லி ஓடையைச் சேர்ந்த சின்னத்தம்பி (50 வயது) என்பவரும், மல்லாகம் பெரிய தம்பிரான் கோவிலடியைச் சேர்ந்த கனகசபை (55 வயது) என்பவரும் மல்லாகம்நீதிமன்ற வீதியைச்சேர்ந்த அந்தோனிப்பிள்ளை (35 வயது) என்பவரும், மற்றும் அவ்விடத்தைச் சேர்ந்த நாசராசா என்பவரது மகனும் இனந்தெரியாத நபர்களால் அவர்களின் வீடுகளில் வைத்து கூட்டிச்செல்லப்பட்டனராம்.

அடுத்தநாள் அதிகாலை இவர்களில் முதல் மூவரும் வெட்டுக்காயங்களுடனும், எரிகாயங்களுடனும் மல்லாகம் பெரிய தம்பிரான் கோவில் பின்பக்க வயல்வெளியில் இறந்துகிடக்ககாணப்பட்டனராம். கனகசபை என்பவர்காயங்களுடன் தமது வீட்டை நோககிஓடும்போது வீட்டுவாசலில் வீழ்ந்து மரணமானாராம்.

நான்காவது நபர் நாகராசா என்பவரின் மகன் படுகாயங்களுடன் உயிர்தப்பியதையடுத்து யாழ் ஆஸ்பத்திரிக்கு உடனடியாக எடுத்துச்செலலப்பட்டுள்ளார்.

## யாழ். வைத்தீஸ்வரா

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

மாணவர் மன்ற வருடாந்த விருந்துபசாரம் எதிர்வரும் 17ம திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கடந்த 12ம் திகதி நடைபெறவிருநத இவ்வைபவம் குருநகர் கடல் தொழிலாளர்களின் கோர மரணம் காரணமாக ஒத்திப் போடப்பட்டது.

## இன்றைய

(3ம் பக்கத் தொடர்ச்சி)

''இத்துயர சம்பவத்தில் பலியான குருநகரைச்சேர்ந்த மூப்பத்தொருகடற்றொழிலாள குடும்பத்திற்கும் எமது அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவர்களது துன்பத்திலும் துயரத்திலும் நாங்களும் பங்கேற்றுக்கொள்கிறோம்'', என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வலி. கிழக்கு தெ.ப.ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

### கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்திற்குத் தேவையான நல்ல தரமான குத்தரிசி, குத்துப்பச்சை தீட்டலும், உடைத்ததும், நல்லெண்ணெய், புடவை மாதிரி விற்பனை நிலையத்தில்விற்பனைசெய்யக்கூடிய வினோதமான பொருட்கள் ஆகியவற்றை வாரந்தோறும் தொடர்ந்து சங்கத்திற்கு விநியோகிக்கக் கூடிய உற்பத்தியாளர்களிடமிருந்து கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் 30-06-86ம் திகதிக்கு முன்னர் சங்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
நீர்வேலி,
12-06-86. A 888




விலை ரூபா 45/- க்கு மேல

- கேசச் சாயத்துறையில் ஒரு நூற்றாண்டு அநுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக்கப்படுகிறது.
- இன்று உலகம் முழுவதிலும், இலங்கையிலும் பெரும் பான்மையானோர் உபயோகிக்கும் ஒரே கேசச் சாயம்.
- சாயம் பூசியபின் எண்ணெய், சவர்க்காரம் ஷம்பு எதனையும் பயமின்றி உபயோகிக்கலாம்.
- உங்கள் கேசத்திற்குப் பொருத்தமான மூன்று வர்ணங்கள், ஷாம்பு வடிவமுட்பட.

உங்கள் கேசத்தினைப் பராமரிப்போர்

ஏக இறக்குமதியாளர்கள்:

ராதா டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்

25, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13. தொலைபேசி: 36060

## வாகனச் சொந்தக்காரர்களுக்கு!

### ஒரு வரப்பிரசாதம்!

பாதுகாப்பான சூழ்நிலையில் உங்கள் வாகனங்களை திருத்துவதற்கு சிறந்த ஓர் இடம்.

சகலவிதமான திருத்த வேலைகள், டிங்கரிங், பெயின்டிங், வயரிங் ஆகியன அனுபவமிக்க கைதேர்ந்த தொழிலாளர்களால் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

நாடுங்கள்:

**பெனின்சுலா மோட்டோர் என்ஜினியர்ஸ்,**
இல. 239, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

[A-732]

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க்

25-ம் திகதி எமது முகவர் உங்களைக் கூட்டிச்செல்வார்.

★ கனடா ★ லிபியா
★ குவைத் ★ சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு உடனடியாக பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

★ சிங்கப்பூர் (பணிப்பெண்கள்)

அத்துடன் பாஸ்போட், BOND, ரிக்கற்றிங் உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

**யூனிவேர்சல் ஏஜென்சி,**
125, (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)

(C 2893)

## BRITE SOAP WASHES BRIGHT




Net Weight: 130 Grams Price: Rs. 2·25

கைதேர்ந்த தொழிலாளர்களால் விஞ்ஞானமுறைப்படி தயாரிப்பவர்கள்
TURBOW COMMERCIAL - ALAVEDDY

★ ★ ★ ★

பிரகாசமான சலவைக்கு
பிறைற் சோப்

[A 239]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல வியாபார நிறுவனத்திற்கு சிற்றூழியர்கள் [15-20] வயதிற்குட்பட்ட வேலையாட்கள் தேவை. யாழ். நகரிலிருந்து 3மைல்களுக்குள் இருப்பவர் விரும்பத்தக்கது. நாட்சம்பளமாகவோஅல்லது வாரசம்பளமாகவோ சரி நேரில் கதைக்கலாம். விபரங்களிற்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரில் வரவும். நியூற்ரோன் எலெக்றிக்கல்ஸ், 141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் [A-843]

## வேலணை பல நோ. கூ. சங்கம் (வரையுள்ளது)

## வாக்காளர் இடாப்பு பூர்த்தியாக்கல் 30-6-1986

சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலுக்காக 30-6-1986-ல் அங்கத்துவ இடாப்பை பூர்த்தியாக்குவதற்கு 10-6-86-ல் கூடிய (புதிய) இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது.

ஆகவே இச்சங்கத்தில் அங்கத்துவம் பெற விரும்புபவர்கள் பூர்த்திசெய்தஅங்கத்துவ விண்ணப்பப் பத்திரங்களுடன் (2 பிரதிகள்), பங்குப் பணமாக ரூ. 10/-வை தத்தமது கிளை முகாமையாளரிடம் செலுத்தி பற்றுச் சிட்டுப் பெற்றுக் கொள்ளவும்.

பங்குகளை முழுமையாக்க வேண்டிய அங்கத்தவர்கள் மீதிப் பணத்தைக் கட்டி ரூபா10/-ஆக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

செயலாளர்.

A 842


உஷா மினி
RED DAWN
நவீன ஆயுதங்களுடன் நகருக்குள் பிரவேசித்து மக்களையும் வாகனங்களையும் அழிக்கும் இராணுவம். இராணுவத்தை எதிர்த்து தாக்குதல் செய்யும் இளைஞர்கள்.
(ஒரிஜினல் பிரதி)

லிடோ
காலை 1 0-30, 2-30, 6-30
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த
தாயில்லாமல் நானில்லை
(கலர்)

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
விதி
(கலர் - புதிய பிரதி)

லிபேட்டி சினிமாவில்
[வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்]
Bygerald seymour நடித்த
Harrys Game
அதி நவீன ஆயுதங்களைக் கொண்டு பயங்கரவாதிகளை அழிக்க முயற்சிக்கும் பயங்கரபோர்நுட்பங்களை கண்டு களியுங்கள்.
(கண்டிப்பாக வயது வந்தோர்க்கு மட்டும்)
10-30, 2-30, 4-30, 6-45
[ஒறிஜினல் பிரதி]
1986ம் ஆண்டு வெளியீடு


## 641 தபால் பொதிகள் யாழ்ப்பாணம் வந்தன

[வவனியா]

கிளிநொச்சியில் நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து கடந்த பத்து நாட்களுக்கு மேலாக வவனியாவில் தேங்கிக் கிடந்த 641 கொழும்புத் தபால் பொதிகள் நேற்று வவனியா தபாலக ஊழியர்களால் யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லப்பட்டது. [து]

## 45-வது நாள் நினைவஞ்சலி



### செல்வி தம்பிராசா இராசேஸ்வரி

அன்னையின் மடியில்: 01-08-1971

ஆண்டவன் அடியில்: 02-05-1986

எங்கள் குடும்பத்தில் குலவிளக்காய் வந்துதித்தவளே அன்புடனும், பண்புடனும் பாசத்துடனும் மதிப்புடனும் வாழ்ந்தவளே. உன்வளர்ச்சி கண்டு மனம் மகிழ்ந்த வேளையில் ஒன்றுமறியா பாலகியாகிய நீ அகால மரணம் அடைந்தாயோ உனது வயதொத்தவரைக் காணும் போது எமதுள்ளம் படும் பாட்டை யார் அறிவார்? உனது உருவமும் உனது செய்கைகளும் எம் மனத்தை விட்டு அகல்வதில்லையே, உன் ஆத்மா சாந்தியடைந்து மீண்டும் எம்குடியில் வந்துதிக்க வேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றோம்.

உமது பிரிவால் வாடும்:

பெற்றோர்,
அண்ணன்மார்,
அக்காமார்,
மைத்துனர்கள்,
அண்ணிமார்.

இ. தம்பிராசா,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம். C 2899

# கடற்றொழிலாளர் படுகொலை; பொதுஸ்தாபனங்கள் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

''தங்கள் சீவனோபாயத்திற்காகவும், எம்மவரின் உணவுத் தேவையை நிறைவாக்கவும், தொழில் நிமித்தம் வலையும் கையுமாக வள்ளத்தில் சென்ற அப்பாவி மக்களை ஆயுதப்படையினர் கொடூரமான முறையில் கொன்ற மனிதாபிமானமற்ற இவ்ஈனச் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.''

இவ்வாறு யாழ் மாநகராட்சி மன்ற ஊழியர்கள், மண்டைதீவில் கொல்லப்பட்ட குருநகர் மக்களின் இறுதி ஊர்வலத்தில் வெளியிட்ட அஞ்சலிப் பிரசுரத்தில் தெரிவித்துள்ளனர்.

இவ் அஞ்சலிப் பிரசுரத்தில் மேலும் எமது மாநகரப் பிரதேசத்தின் ஒரு பகுதியான குருநகரில் நடைபெற்ற இவ் அழிப்புக்களுக்கும் அனர்த்தங்களுக்கும், அவலங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள். எமது சகோதரர்களது துன்பத்தில் சமமாக பங்குகொள்வதுடன் அரக்கத்தனத்திற்கு ஆளாக்கப்பட்ட குடும்பங்களிற்கு அனுதாபத்தை தெரிவிக்கிறோம் என கூறப்பட்டுள்ளது.

இதுபோன்ற பல அனுதாப அஞ்சலிப் பிரசுரங்களையும், கண்டன அறிக்கைகளையும் நாவாந்துறை புனித நிக்கிலஸ் சனசமூக நிலையம் நாவாந்துறை இணக்கசபை, கடற்றொழிலாளர் சங்கம், பாஷையூர் கடற்றொழில் விரிவாக்க சேவா சங்கம், யாழ். வைத்தீஸ்வரா க. பொ. த. (சாதாரண/உயர்தர) வகுப்பு மாணவர்கள், கல்முனை விநாயகர் கடற்றொழில் விரிவாக்க சேவா சங்கம், குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி, மணிப்புரி பொது ஸ்தாபனங்கள், அப்பகுதி மக்கள், பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழகம். வடமாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சமாசம், யாழ். மாவட்ட மாட்டிறைச்சி வியாபாரிகள் சங்கம், கிறீன் பீல்ட் சனசமூக நிலையம், நாவாந்துறை கென்னடி வீதி மக்கள். வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை, நாவலடி கடற்றொழிலாளர் விரிவாக்க சங்கம் ஆகியன வெளியிட்டுள்ளன. [சிவ-க]

## அகதிகளுக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலையில் கடமையாற்றும் இரு டாக்டர்களின் உதவியுடன் மருத்வசங்கம் கிளிநொச்சி அகதிகளுக்காக கிளிநொச்சிதமிழ்ச் சங்கத்திற்கு 8000 ரூபா பெறுமதியான மருந்துவகைகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

யாழ். அன்னையர் முன்னணியும் உணவு, உடை, பால்மா என்பவற்றை வழங்கியுள்ளது. (த)

## அத்தியாவசிய சேவைகள் குழு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப்பகுதியில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்களினால் பாதிக்கப்பட்டோரின் அவசரதேவைகளை கவனிக்கும்பொருட்டு அத்தியாவசிய சேவைகள் குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இக்குழுவில் கிளிநொச்சி மேற்கில் உள்ள கி. மு. சங்கம், மாதர்முன்னேற்றசங்கம், ஏனைய கழகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களே அங்கத்தவர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இக்குழு உறுப்பினர் விபரம் வருமாறு: தலைவர்: மு. இராமநாதன், செயலாளர்: சி. கதிரவேலு, பொருளாளர்: கா. நாகலிங்கம், நிர்வாக உறுப்பினர்கள் திருமதி செல்வராணி சோமசேகரம்பிள்ளை, திரு. பொன் சபாபதி, க. கயிலாயநாதன், த. செல்லத்தம்பி. (சிவ-க)

## பரந்தன் கூட்டுறவு அலுவலகம் பளைக்கு இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

பரந்தன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் பளை ப. நோ. கூ. சங்கத் தலைமைக் காரியாலய மண்டபத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பரந்தன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எம். எஸ். தர்மலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

பளை. ப. நோ. கூ. சங்கக் காரியாலயத்தின் ஒருபகுதிக்கு இடமாற்றம் பெற்றுள்ள பரந்தன் கூட்டுறவு அலுவலகம், கரைச்சி வடக்கு தெற்கு, பூநகரி, பளைஆகிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக அலுவல்களையு பரந்தன் பகுதியிலுள்ள ஏனைய கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக அலுவல்களையும் மேற்பார்வை செய்யும். [வா

## சீனி போதியளவு உண்டு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் சீனித் தட்டுப்பாடு ஏற்பட மாட்டாதென உதவி உணவுக் கட்டுப்பாட்டாணையாளர் தெரிவித்தார்.

திங்கட்கிழமை சீனிக்கப்பலொன்று வருவதாகவும் ஏற்கனாவ பலநோக்குக் கூட்டுறவு சங்கக் கடைகளில் போதுமனே சீனி கையிருப்பிலிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## திருப்பலி பூசை

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவில் கடந்த செவ்வாயன்று கொலைசெய்யப்பட்ட குருநகர் மீனவர்களின் ஆத்மசாந்திக்காக நாளை திங்கட்கிழமை குருநகர் சனசமூக நிலையத்தில் திருப்பலி பூசை ஒன்று ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. நாளை மாலை 5.30 மணியளவில் இப்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.


அச்சுக்கோப்பாளர் தேவை

அநுபவம் மிக்க அச்சுக்கோப்பாளர்கள் நேரில் வரவும். பகுதிநேரமாகப் பணிபுரிய விரும்புபவர்களும் நேரில் வரவும்.

செட்டியார் அச்சகம்,
யாழ்ப்பாணம்.
[C 840]

மகிழ்ச்சிகரமான செய்தி
இடமாற்றம்

லெயிடன் காமன்ஸ் ஸ்தாபனம் தங்கள் சேவையை தற்காலிகமாக 95, (235) ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு மாற்றம் செய்திருக்கிறார்கள்.

சேவைகள் வழமைபோல் நடைபெறுகின்றன.

மனேஜர்
லெயிடன் காமன்ஸ்,
யாழ்ப்பாணம்.
[C [illegible]]


## அறிவித்தல்

### துரை மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிறுவனம்

66, 68, ஸ்ரான்லி வீதி,
ஆர். ஜி. கட்டிடம்,
யாழ்ப்பாணம்.

மேற்படி நிறுவனத்தின் வியாபார நிமித்தமும் மற்றும் வேறு வகைகளிலும் கொடுக்கல் வாங்கல் மூலம் பாதிப்புற்றவர்கள் தங்கள் முறையீடுகளை எங்கள் இணக்கசபைக்குக் கொடுத்துள்ளார்கள் இதன் நிமித்தம் நாம் கடை உரிமையாளரின் அன்னையாரை விஞவியபொழுது அவர்கள் இதுதொடர்பாக சில விளக்கங்களை எம்மிடம் கொடுத்துள்ளார்கள். ஆகவே இது தொடர்பான விசாரணையை கந்தர்மடம் இணக்க சபை ஆரம்பித்துள்ளதால் பாதிப்புற்றவர்கள் எம்மிடம் தொடர்புகொள்ளும்படி இத்தால் வேண்டப்படுகின்றனர். முதலில் உங்கள் கோரிக்கைகளை எழுத்து மூலம் இணக்கசபைத் தலைவருக்குக் கையளிக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள். இதன் பின்னர் விசாரணைபற்றிய திகதி அறிவிக்கப்படும்.

தங்கள் கோரிக்கைகளை 21-06-86 ம் திகதி சனிக்கிழமை அன்று பிற்பகல் 3மணி தொடக்கம் 5.00 மணி வரை கந்தர்மடம், பண்டிதர் சனசமூக நிலையத்தில் கையளிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

இவ்விசாரணை முடியும்வரை யாரும் இவ்விடயம் தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் இத்தால் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்

நா. தியாகராசா
கந்தர்மடம் இணக்கசபைத் தலைவர்.

கந்தர்மடம் இணக்கசபை,
பண்டிதர் சனசமூக நிலையம்,
யாழ்ப்பாணம்.
1986-06-14

(C2903)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

ஞாயிற்றுக்கிழமை 15-6-86

தீவிரவாதத்தில் ஈடுபடமாட்டோம் என

# கைதானவர்கள் உறுதிமொழி அளித்தால் விடுவிக்கப்படுவர்

## வவனியா இணைப்பதிகாரி கூறுகிறார்

[வவனியா]

''இனிமேல்தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபடமாட்டோம் எனக் கைதானவர்கள் உறுதிமொழி அளிப்பார்களாகில் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பேன்'' என்று வவனியா மாவட்ட இணைப்பதிகார்கேணர்ல்கொப்பேகடுவ கூறியுள்ளார்.

வவனியா மாவட்டத்தில் இராணுத்தினரால் கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பாக வவனியா மாவட்டப் பிரஜைகள் குழுவின் செயலாளர் டாக்டர் எஸ். பி. பரராசசிங்கம் இணைப்பதிகாரி கேர்ணல் கொப்பேகடுவையை அவரது காரியாலயத்தில் சந்தித்தார். இச்சந்திப்பின் போதே கேர்ணல் இவ்வாறு கூறினார்.

கேர்ணல் கொப்பேகடுவ மேலும் கூறுகையில்; தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களில் அவர்களில் ஒரு சில முக்கியமானவர்களை எமது படையினர் கைது செய்துள்ளனர். இவர்களை எக்காரணம் கொண்டும் விடுவிக்க முடியாது. ஆனால் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடாது சொற்ப பிழைகளை செய்தவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அண்மையில் வவனியாவில் கைதுசெய்யப்பட்ட முப்பது பேரில் ஐந்துபேர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளனர். எஞ்சியவர்கள் மீதான விசாரணை உடன் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்த கேர்ணல், ஆயுதப்படையினர் மக்களுடன் எவ்வாறு நடந்துகொள்கின்றனர் என்பது பற்றித் தம்மிடம் கேட்டறிந்து கொண்டதாகவும் டாக்டர் பரராசசிங்கம் கூறினார். [ரா]

## பென்சன் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை, அச்சுவேலி, புங்குடுதீவு, சுழிபுரம் ஆகிய இடங்களில் இருந்து வரும் ஓய்வூதியகாரருக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட இருந்த பென்சன் இம்மாதம் 17 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இத்தினத்தில் இவர்களுக்கு உரிய பென்சன் துரையப்பா விளையாட்டரங்கில் வழங்கப்படுமென யாழ். தபால் அத்தியட்சகர் அறிவித்துள்ளார். (த)

## அதிபரின் மேசையில் எச்சரிக்கைக் கடிதம்

(வவனியா)

வவனியா வெளிக்குளம் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபரின் மேசையில் சிவப்பு மையினுல் எழுதப்பட்ட எச்சரிக்கைக் கடிதம் ஒன்று நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது.

''முதலில் சங்கிலி அறுப்போம், ஆசிரியரைத் தாக்குவோம், யாழ்ப்பாண ரீச்சர்மார் இங்கிருந்து போய்விட வேண்டும், இல்லாவிட்டால் நாய் மாதிரிச் சுட்டுத் தள்ளுவோம்'' என்று கொச்சைத் தமிழில் இந்த எச்சரிக்கைக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

இவ் எச்சரிக்கைக் கடிதம் வவனியா கல்விப்பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது,

இப்பாடசாலையில் கடமையாற்றும் யாழ்ப்பாணப் பகுதி ஆசிரியர்கள் இந்த எச்சரிக்கைக் கடிதத்தின் பின் லீவில் சென்றுள்ளார்கள். இதனால் நாளை இப்பாடசாலை நடைபெறுமா? என்பது சந்தேகத்திற்கிடமாயுள்ளது. [து]

## வவனியாவில் தேடுதல்: நால்வர் கைது

(வவனியா)

வவனியா நகரசபைக்குட்பட்ட பண்டாரிக்குளம், பூமான்குளம், புங்கிளாங்குளம் ஆகிய இடங்களைச் சுற்றி வளைத்த ஆயுதப்படையினர் நேற்றுமுன்தினம் தேடுதல் நடத்தினர். சுமார் 2000 படையினர் இப்பணியில் ஈடுபட்டனர்.

இத்தேடுதலின்போது வைரவப் புளியங்குளத்தைச் சேர்ந்த 4 வர்த்தகர்கள்கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அப்பகுதிக் கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன.

## பத்து இடங்களில் வாகனங்கள் சோதனை

(வவனியா)

வவனியாவிலிருந்து கொழும்பு செல்லும் சகல வாகனங்களும் சுமார் பத்து இடங்களில் சோதனைக்குள்ளாகின்றன.

மதவாச்சி, அநுராதபுரம், 17ம் கட்டை, புத்தளம், பாலாவி, ஆராய்ச்சிக்கட்டை, சிலாபம் ,நீர்கொழும்பு, கட்டானை, களனி ஆகிய இடங்களில் சோதனை இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது. (க)

## கிளிநொச்சியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி நகரில் சகல கடைகளும், தொழிற்சாலைகளும் வர்த்தக நிலையங்களும் தொடர்ந்து மூடப்பட்டே கிடக்கிறது. இதே வேளை கிளிநொச்சி கச்சேரியில் நிலை கொண்டிருந்த இராணுவம் முகாமிற்குத் திரும்பிவிட்டது. இதே போல்வேறு சில இடங்களிலும் இருந்த இராணுவம் முகாமிற்கு திரும்பியுள்ளது.

கிளிநொச்சியில் இயங்கி வந்த முக்கிய அலுவலகங்கள் சில பளையில் இயங்க ஆரம்பித்துள்ளன.

கிளிநொச்சி நகரம், கணேசபுரம், பரவிப்பாஞ்சான், ஆனந்தபுரம், திருநகர், கரடிப்போக்கு முதலான இடங்களில் இருந்து வெளியேறியுள்ள சுமார் 50 ஆயிரம் மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பவில்லை. இவர்கள் தூர இடங்களிலுள்ள உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் அகதிமுகாட்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். இப்பகுதி பாடசாலைகளும் தொடர்ந்து மூடப்பட்டே உள்ளது.

இதே நேரம் கிளிநொச்சி நகரில் கடைகளைத் திறக்குமாறும் அலுவலகங்களை திறக்குமாறும் ஆயுதப்படையினர் வற்புறுத்தி வருகின்றூர்களாம். [க]

## புலிகள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வீரமரணம் அடைந்தார்.

பலத்த சேதத்துடன் முகாமுக்குள் திரும்பிய இராணுவத்தினர் மோட்டர் 'ஷெல்', ஆட்டலறி' ஷெல் தாக்குதல்களை நடாத்தினர்.'

## இராணுவ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தில் இரு இராணுவவீரர்கள் ஸ்தலத்திலேயே பலியாகினுர்கள் என்று கூறப்படுகின்றது.

அதே நேரம் கிழக்குப்புறத்தால் வெளியே வந்த சிப்பாய்கள் மீது புலிகள் சரமாரியான துப்பாக்கிவேட்டுக்களைத் தீர்த்தனர். இரு பகுதியினருக்குமிடையே நடைபெற்ற எதிர் தாக்குதல்களில் இரு இராணுவத்தினர் பலியாகினராம்.

சிறிது நேரத்தில் மேற்குத் திசையிலிருந்து வந்த ஹெலிக்கொப்டர் இப் பகுதியைச் சுற்றி வட்டமிட்டு பறந்து கொண்டிருந்தது. விடுதலைப் புலிகள் பதில்தாக்குதலை மேற்கொண்ட வண்ணம் இருந்தனர்.

## இலங்கையின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி[

தொடர்ந்து பேசிய திரு. சிதம்பரம், ''தற்போது இலங்கை சென்றுள்ள, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திரு: பேர்னுட் திலகரத்தின புதுடில்லி திரும்புகையில், இலங்கை அரசின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான விரிவான விளக்கங்களை எடுத்து வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.'' என்றூர்

''இனப்பிரச்னை தீர்வுக்கான இலங்கை அரசின் விளக்கங்கள் இந்திய மத்திய அரசினுல் பரிசீலனை செய்யப்படும்.'' என்று கூறிய அமைச்சர், ''பரிசீலனை செய்யப்பட்ட பின்பே தொடர்ந்து இந்தியாவின் நிலைகுறித்து தீர்மானிக்கப்படும்'' என்றூர்

## ஊரடங்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இரவு ஏழுமணிதொடக்கம் இன்றுகாலை ஐந்து மணி வரையும் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

## சைக்கிள் கொள்ளையர்கள் கைது

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் இடம்பெற்றுவந்த சைக்கிள் கொள்ளைகள் சம்பந்தமாக சிங்கள தீவிரவாதிகள் பலரைப் பாதுகாப்புப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வவனியா ஆயுதப்படை முகாமில் நடைபெற்ற மகாநாடொன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது. (மா)

## தொலைபேசி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு உள்ளிட்டு சகல மாவட்டங்களுடனுனதொலைபேசித் தொடர்புகள் மீண்டும் நேற்றிரவு 8 மணி தொடக்கம் செயலிழந்துள்ளன. (மா)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் வள்ளியம்மை

சுப்பிரமணியம் வள்ளியம்மை 14-06-86 இல் காலமானுர். இவர் காலஞ்சென்ற Dr. சுப்பிரமணியத்தின் அன்புமனைவியும், கற்பகம், சண்முகம் (Shan) (டென்மார்க்) ஆகியோரின் அன்புத்தாயாரும், Dr. ராஜேந்திரம் (புத்தூர் ஆஸ்பத்திரி), காயித்திரி ஆகியோரின் அன்புமாமியாரும், ராஜினி [யாழ். பல்கலைக்கழகம்) ராஜந்தினி [தொழில் நுட்பக்கல்லூரி) பிரியா, யதுயாதவன், ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 15-6-86 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு கோப்பாய் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: Dr. சி. ராஜேந்திரம், ''பெத்தரி''
(நாவலர் பாடசாலைக்கு அருகில்)
கோப்பாய்தெற்கு.

(C 2887)

### சங்கீத பூஷணம் வீணை ஆசிரியர் திருமதி கமலா கிருஷ்ணமூர்த்தி

அவர்கள் 13-06-86 லண்டனில் காலமானுர்.

இவர் காலஞ்சென்ற சிதம்பரம் ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயர் [சங்கீத பூஷணம்] அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்ற E. S. தங்கராஜா, திருமதி பூரணம் தங்கராஜா ஆகியோரின் அன்பு மகளும். ராஜமோகன் [பொறியியலாளர், U. K.], அவர்களின் அன்புத்தாயாரும், ஜனகலஷ்மி [U. K.] அவர்களின் அன்புமாமியாரும், ராதா [U.K.], அபிராமி [U.K.], கிருஷ்ணு [U.K.] ஆகியோரின் அன்புப் பேத்தியும். ரஞ்சிதவதி செல்வராஜா, சத்தியவதி [மணி], ஜொய்ஸ், கிருபராஜ் (New york) ஆகியோரின் அன்புச் சகோதரியும், எட்வேட், V. M. V. நல்லநாதன். அனீஸ், திருமதி கனகேஸ்வரி [மலர்], செல்வராஜா, திருமதி மாகிரட் கிருபராஜா [இந்தியா] ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னுரின் ஈமக்கிரியை லண்டன் No. 2, Wortley Road, East Ham, London E 6 ல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: T. D. செல்வராஜா.
இல. 6, பெந்துக்கோஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[C 2900]

### சின்னையா சரவணமுத்து

[Retired Post Master]

சுதுமலை மத்தியைச் சேர்ந்த சின்னையா சரவணமுத்து காலமானுர். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் சீனிவாசகம் சின்னையா [கொக்குவில்] அவர்களின் மூத்த மகனும், ஸ்ரீமதி அம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீநிவாசன் [இலங்கை வங்கி, கொழும்பு], ஸ்ரீரஞ்சன் [Canada, முன்னைநாள் ஆசிரியர் மானிப்பாய் இந்துக்கல்லூரி], ஸ்ரீதரன் (Abudhabi), சாரதாதேவி [U.K], ஸ்ரீதாசன், (Abudhabi) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசராசா [U. K], தவனேஸ்வரி, சிவதேவி, வையந்தி ஆகியோரின் அன்புமாமனுரும்; சுதர்சன். பிரஷாந், பிரதீபன், ரூகானி, கிரிஷாந், வைஷ்ணவி, கஜேந்திரன், வசீகரன் ஆகியோரின் ஆசைப்பேரனும், இராசமணி, கருணப்பிரகாசம் ஆகியோரின் சகோதரனும்; திருமதி அருட்பிரகாசம், காலஞ்சென்ற திருமதி நடராஜா, காலஞ்சென்ற சரவணமுத்து, திருமதி கருணப்பிரகாசம் ஆகியோரின் மைத்துனரும்; காலஞ்சென்ற அருட்பிரகாசம், நடராஜா (Retired Goods Agent C.G. R) ஆகியோரின் சகலனும், திருமதி இராசம்மாவின் அன்புப் பெருமகனும்; மலாயன் பென்சனியர் சுப்ரமணியம் (கைதடி) தர்மலிங்கம் (கொக்குவில்). ஆகியோரின் மருமகனும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை [16-6-86] காலை 10 - 00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் தயவு செய்வு ஏற்றுக்கொளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேம்.

[C 2907] தகவல்: ச. ஸ்ரீநிவாசன்,

## மரண அறிவித்தல்

### வைத்திய கலாநிதி செ. பொன்னம்பலம்

வைத்திய கலாநிதி செ. பொன்னம்பலம் அவர்கள் கொக்குவில் மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் 14-6-86 ல் சிவபதமடைந்தார். ஈமக்கிரியைகள் 15-6-86 அவரது இல்லத்தில் (பகல் 12 மணியளவில்) நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

(C 2908) தகவல்: கு. குருசாமி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org